† இவளுடைய வார்த்தை இவளுக்குஜ்ஜீவநஹேதுவானபடி யென்னென்னில்; † கட்டுவிச்சி வார்த்தை, பகவத்பரமா யிருக்கையாலும், இவள் தன்னுடையவ்யாபாரம் விரக்திபரமா யிருக்கையாலும், "இவளழகிலே அவன்படும்பாட்டை இவள் படிவதே!" என்று அவளைப்ரஸங்கிக்கையாலும், (க) * தீர்ப்பாரையாமினியில் கட்டுவிச்சிபோலன்றியே திருமடலில்கட்டுவிச்சிபோலே மஹாபாகவதையாயிருப்பாளொருத்தியாகையாலே ‡"நோவுதீர்கையன்றிகேகவர்த்திக்கிலும் அவள்ஸ்பர்சமமையும்" என்னும்படி யிருக்கிறவளை பரஸங்கிக்கையாலும், ஆஶ்வாஸ ஹேதுவாகத்தட்டில்லை.

இன்னமும் † முதல்பத்து, இவர் தம்முடைய வார்த்தை; இரண்டாம்பத்து திருத்தாயார் வார்த்தை; மூன்றும்பத்து பிராட்டியார் வார்த்தை. (உ) "मच्चित्ता मद्गतप्राणाः बोधयन्तः परस्परम् - மச்சித்தா மத்கத ப்ராணாः போதயந்தஃ பரஸ்பரம்" என்கிறபடியே மூன்று பத்துக்கும் மூன்றுவாக்யார்த்தம்; - [मच्चित्ताः-மச்சித்தாः] मदेकचित्ताः- மதேகசித்தாः. விஷயாந்தரம் கலசாதபடி அநந்யார்ஹராய் அநந்யபோக்யரா யிருக்கிறபடியைப் பேசுகையாலே-முதல்பத்து ஜ்ஞாநபரம்; இரண்டாம்பத்து- அந்த ஜ்ஞாநகார்யமான வைராக்ய பூர்வகமாக பகவத்ப்ராவண்யாதி சயதனைச்சொல்லுகிறது; ‡ ப்ரேமபூர்வகமாஞல் ப்ராப்தியளவும் செல்ல நிலைவரோடே காலக்ஷேபம் பண்ணும்படியைச்சொல்லுகிறது - மூன்றும்பத்து; இரண்டாம்பத்து [मद्गतप्राणाः - மத்கதப்ராணாஃ] என்றதிறே, தன் மூச்சடங்கித் தாயார் வாயாலே வார்த்தை சொல்லுகையாலே; [बोधयन्तः परस्परम्-போதயந்தஃபரஸ்பரம்] என்றதிறே, தோழியோடே வ்ருத்த கீர்த்தநம் பண்ணுகையாலே.

இதில் முதல்பாட்டில் திருத்தாயார் இவளுடைய § விரக்தியையும் கட்டுவிச்சிசொன்ன வார்த்தையையும் விளவவந்தார்க்குச் சொல்லுகிறாள். "அவர்களுக்குச் சொல்லுகிற வார்த்தையொன்றும் தன்னுடைய பாவவ்ருத்தி யொன்று மாயாயிற்றிருக்கிறது. "விஶ்லே

இவளுடையவார்த்தையாவது - கட்டுவிச்சிவார்த்தையை யநுவதிக்கையாலும், மகள் வ்யாபாரத்தைச்சொல்லுகையாலும், கட்டுவிச்சியிடையவைலக்ஷண்யத்தைச்சொல்லுகையாலும். தாயாருடையவார்த்தை மகளுக்குஜ் ஜீவநஹேதுவென்று உத்தரம்.

மூப்பதுபாட்டையும் மூன்றுபத்தாகப்பிரித்து அருளிச்செய்கிறார்.

(உ) தி-வாய்-ச-சு. (க) கீதை.

‡ (பா) ப்ரேமபூர்ணமாஞல். § (பா) அசக்திகை.

ஷத்தில் இப்படி அவஸ்ந்ஸையாம்படி ப்ரணயதத்தில் தேஹிகையாவ
தே!" என்கிற உகப்பாயிற்று உள்வாயில் தனக்குச்செல்லுகிறது.

தனக்கு அபிமதமாயிருந்தால் அது தன்னை இவர்களுக்குச் சொல்லக்குறையென்னென்னில்; இயற்கையில் புணர்ச்சியாகையாலே அவர்களுக்குச் சொல்லமாட்டுகிறிலள், கடகரடியாகப் பிறந்த ஸம்பந்தமாகிலிறேசொல்லலாவது; ஆசார்யோபதேசபூர்வகமாக பகவதஸம்பந்தயுக்தனுகிலிறே நமக்குக் கொண்டாடலாவது. † அஜ்ஞாநகார்யமான கலக்கம் யதாஜ்ஞாநத்தாலே நிவர்த்யம், யதாஜ்ஞாநகார்யமான கலக்கம் - யாவதாத்மபாவி அநிவர்த்யம் என்னுமதிறே - இப்பாட்டில் ப்ரகாசிக்கிறது.

(பட்டுடுக்கும்) † இதுவும் மேற்சொல்லுகிற அவஸ்தைகளோபாதி ஆற்றுமையிலே ஒரு அவஸ்தாவிசேஷம். † அவன் ஸம்ஸ்லேஷதசையில் அவயவசோபையைக் காட்டிலும் ஸமுதாயசோபையைக் காட்டிலும் உடையழகிலே யீடுபட்டு, "இதொரு உடையழகிருக்கும்படியே!" என்று அதிலே ஸக்தையிருக்கும்படியைக்கண்டு, அவன் வருகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறாள்; - புடைவை யுடுக்கதிதாடங்கினள். அவ்வுடையையுடுக்க "இத்தை யிழுக்கவொண்ணாதென்று அவன் வரும்" என்று அத்தை யுடுக்கத்தொடங்கினள். (உடுக்குமா) † அவன் ஆதரிக்கும் உடை அவன் வருமளவும் அழிப்பது உடுப்பதாகிறபடி. † அவனுக்கு உறுப்பாகத் தன்னுடம்பை அலங்கரிக்கையும் ப்ராப்தமிறே. † சேஷிக்கு அபிமதமானபோது நியந்த்ருத்வமு முத்தேஸ்யமாயிறேயிருப்பது.

(அயர்த்து) உடைவாய்த்தவாறே அவன் வருமென்று ஸந்துஷ்டையாயிருந்தாள், † அவ்வளவிலும் வரக்காணுமையாலே மேலும் ஹர்ஷகதையாளுள். அவன் வருகைக்குறுப்பாக அலங்கரிததாள்

கலகம் தயாஜ்யமன்றேவென்ன அருளிச்செய்கிறார், (அஜ்ஞாநகார்யமித்யாதி).

* மோஹித்தவள் உடுக்குமேமோவென்ன; அருளிச்செயகிறார் (இதுவும் மேற்சொல்லுகிறவிதயாதி). அவஸ்தாவிசேஷத்திலேபலித்தத்தை அருளிச்செய்கிறார் (அவன்ஸடஸ்லேஷ தஸ்சயிலிதயாதி). வர்த்தமாநத்தைத பற்ற அருளிச்செயகிறார் (அவனைகரிக்கும உடை அவன் வருமளவித்யாதி). தன்னுடம்பை அலங்கரிக்கையாமோவென்ன; அருளிச்செய்கிறார் (அவனுக்கித யாதி). அவனுக்கு உறப்பாறலும் செய்யாதது செய்யலாமோவென்ன; அருளிச்செய்கிறார் (சேஷிக்கபிமதமித்யாதி).

ஆற்றுமையாவது யென்னுதல்; ஸ்வரூபஹாநியாலேயென்னுதல்.

திருநெடுந்தாண்டகம்-கக-பா-பட்டுடுக்கும் வ்யாக்யாநம். கூந

அதிலும் அவன் வரக்காணுமையாலே ஸ்வார்த்தமாய் விழுந்தது, ஸ்வரூபஹாநியாலே மோஹங்கதையாளள். † ஆற்றுமையால் வரும் மோஹம்போலன்றே - ஸ்வரூபஹாநி பிறந்தால் வரும் மோஹம்! (இரங்கும்) (க) "ப்ரலாப ஸ்தாஸமோஹ: - ப்ரலாபஸ்ததாஸம்மோஹ:" என்று இரக்கத்துக்குப்பின்பு மோஹமாகப்ராப்தமாயிருக்க அக்ரமமாகச் சொல்லும்படியிறே இவ்விஷயத்திலுடைய வைலக்ஷண்யமிருப்பதும், இவருடைய ஆற்றுமையின் வைலக்ஷண்யமிருப்பதும். இரக்கமாவது - அவனை யணையவேணுமென்னும் த்வநையாலேபிறந்தஅலமாப்பு. † மோஹம் ஸ்வஸ்த்த தசை என்னும்படியிறே இந்தஅலமாப்பிருப்பது.

அதவா, (பட்டுடுக்கும்) நக்நமாய்த் திரிகிறது லஜ்ஜாவஹமாய், பட்டுடுக்கும்படியான பருவங்கிடீரென்கிறாள். (பட்டு) வஸ்த்ரஸாமாந்யத்துக்கும் போர்; (க) "பொத்திப்புலியுகிர்ப்பட்டு" என்றாற்போலே வஸ்த்ரவிசேஷத்துக்கும்போர். (உடுக்கும்) அனையில்தொங்காதபடியாலே எடுப்பது உடுப்பதாகிறபடி. † (உ) "முலையோமுழுமுற்றும்போந்திலை மொய்பூங்குழல்குறிய கலியோ வணையில்லை - இவள்பரமே!" என்றிறே ஒருதிருத்தாயார் வார்த்தை. (அயர்த்து) பருவமிதுவாயிருக்க வ்யதிரேகத்தில் மூச்சடங்கும்படியிறே ப்ரணயத்தில் தசையானபடி. (இரங்கும்) † அதுதான் ஸ்வஸ்த்த தசையென்னும்படி, மோஹங்கதையான தசையிலே ஜ்ஞாநம்வந்து குடிபுகுந்து அவனை நினைத்து அரதியாய்ச் செல்லாநின்றதாயிற்று. மோஹத்தில் ஜ்ஞாநம் நடையாடாதபடியாலே துக்கமில்லையிறே. †

(பாவைபேணுள்) இவருடைய தசாவிசேஷத்தைக் கண்டு "இவளைத் தரிபபிக்கும் விரகேதோ" என்று பார்த்து, பண்டு ஒளஷதக்கமில்லாதபடி பாவையோடே போதுபோக்கக் காண்கையாலே பாவையைக்கொண்டுவந்துகாட்டிருள், அதுத்திருஷ்டிவிஷம்போலே

ஆற்றுமையாலே யென்னவுமையாதோ, ஸ்வரூபஹாநியாலு மென்னவேணுமோ வென்ன; அருளிச்செய்கிறார் (ஆற்றுமையால் வரும்தயாதி). மோஹித்தவள் இரங்கக்கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (மோஹம் ஸ்வஸ்த்ததசையிதயாதி). மோஹத்திலேஜ்ஞாநமில்லாமையாலே துக்கமட்டமாய், இரங்குகிறவவஸ்த்தையிலே ஜ்ஞாநமுண்டாகையாலே துக்கமநுசயித்திருக்குமென்றபடி.

கலை அரையில் தொங்காதவவஸ்த்தையிலே ப்ரணயத்திலே விதக்த்தை பென்ற விடமுண்டோவென்ன; அருளிச்செய்கிறார்(முலையோமுழுமுற்றுமித்யாதி). (இரங்கும்) என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (அதுவித்யாதி). (திருஷ்டிவிஷம) - கண்ணுக்குவிஷம்போலே அஸஹ்யமாயிருக்கை.

(க) (உ) தி-வி-சூ0.

யாயிற்று. பாவையை யொழியச்செல்லாதவள்கிடீர் பாவையை அநாதரிக்கிறாள். போகோபகரணங்களோடி தொற்றறும்படிகிடீர் ஒருவிஷயத்திலே அவகாஹித்தபடி. இத்தால் - பகவத்விஷயத்திலே அவகாஹித்தார்க்கு விஷயாந்தரங்கள் தருஷ்டிவிஷம்போலேயிருக்குமென்னு பர்த்தத்தை வெளியிடுகிறார். † பகவத்விஷயத்தில் ப்ராவண்யம் பகவத்பரஸாத ஸித்தமானமோபாதி விஷயாந்தரங்களில் விரக்தியும் பகவத்ப்ரஸாத பலமிறே.

(பனிநெடுங்கண்ணித்யாதி) உறக்கமும் குடிபோயிற்று. (பனிநெடுங்கண்ணீர்ததும்ப) † ஆநந்தாச்ருவுக்கிலக்கானகண் சோகாச்ருவுக்கிலக்காவதே! ஸுகேக்ஷத்ரம் * வெள்ளங்கொண்டாற்போலே ஈச்வராபோக்யமானகண் படும்பாடிவரவே! இது. (பனிநெடுங்கண்) (க) "ஆஹ்லாதசீதநேத்ராம்பு: - ஆஹ்லாதசீதநேத்ராம்பு:" என்கிறபடியே ஸம்ச்லேஷதசையில் கண்ணீர் சீதளமாயிறே யிருப்பது. (நெடுங்கண்) † அல்லாத அவயவங்களிற் காட்டில் கண்ணழகிலே ஈடுபடுபடியிறே கண்ணின்போக்யதையிருப்பது. (உ) †† "ஏகைககுணாவதீப்ஸயாஸதாஸ்த்திதா:" என்றபடியே - பகவத்குணங்களில் ஓரோகுணங்களே அவதிகாணவொண்ணுதாற்போலே யாயிற்று - விபுவாய் ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியாயிருக்கிற ஈச்வரனுக்கும் இவள்கண்ணீரின் போக்யதையை பரிச்சேதிகவொண்ணுதபடி. அவன் ஸ்வரூபத்தாலே அபரிச்சிந்நன்; இவள் போக்யதையாலே அபரிச்சிந்நை. அதவா, (நெடுங்கண்) உபயவிபூதி யுக்தனையுங்கூட ஒருபுடையிலே யடக்கவற்றாகண்ணென்னவுமாம். இத்தால் - ஜ்ஞாநவைபவத்தைச் சொல்லுகிறது. (நீர்ததும்ப) சோகாச்ருவாலே தளும்புகையாலே.

(பள்ளிகொள்ளாள்) உறங்குகிறிலள். ஸம்ச்லேஷதசையில் ஆநந்தாச்ருவாலே யுறங்கப்பெறாள்; விச்லேஷ தசையில் சோகாச்

இப்படி அஸஹ்யபமாகைக்கு அடியேதென்ன; அருளிச்செய்கிறார் (பவத்விஷயதிலேயித்யாதி).

தாயாருக்கும் தனக்கும் அவனுக்கும் போக்யமானவாகாரத்தைப்பற்றாத்பர்யத்வய மருளிச்செய்கிறார் (ஆநந்தாச்ருவுக்கு) இத்யாதி வாக்யத்வயத்தாலே. எல்லாமிருக்கக் கண்ணழகைச் சொல்லுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (அல்லாதவவயவங்களிலித்யாதி). நெடுமை - அழகால் வந்த மிகுதியாதல்; கண்ணின்பெருமையாதல்.

---

* (பா) "வெள்ளங்கோத்தாற்போலே"

(க) விஷ்ணுதத்வம். (உ) ஸ்தோ-ர.

திருநெடுந்தாண்டகம்-கக-பா-பட்டுடிக்கும் வ்யாக்யாநம். கூரி

ருவாலே யுறங்கப்பெறுள். † ஸம்ஸ்லேஷ தசையில் அவனுறங்கவொ
ட்டான்; விஸ்லேஷதசையில் விரஹம் உறங்கவொட்டாது. தன்வயி
ற்றில் பிறந்த இவள் உறங்காளென்ன ப்ராப்தமாயிருக்க, (பள்ளி
கொள்ளாள்) என்பானென்னென்னில்; வயிற்றிற் பிறந்தவளேயா
கிலும் ராஜமஹிஷியாகப் பட்டங்கட்டினால் "ஆழ்வார்" என்
றிறே சொல்லுவது. ~அப்படியே புத்ரனை சிஷ்யனை வாசி
யற அவர்களுக்கு பகவத்ஸம்பந்தமுண்டானால் உத்தேஸ்யதை தோ
ற்ற பூஜாவாசி சப்தங்களாலே சொல்லக்கடவதென்று பூர்வாசார்
யர்களநுஷ்டித்துப்போந்த சாஸ்த்ரார்த்தத்துக்கடி இதிறே.~
இவளுடைய ஸௌகுமார்யத்தை யநுஸந்தித்து "உறங்காதொழி
வதே!" என்கிறாள்.

(எட்டிணைப்போதென் குடங்காலிருக்ககில்லாள்) இவள் உறங்
கக்காணுமைபாலே, முன்பு தன்மடியிலே யுறங்கிப்போகக் கண்ட
வாஸனையாலே தன்மடியைக் கொடுத்தாள்; அது நெருப்பிலே
அணைந்தாற்போலிருக்கையாலே துணுக்கென்னவெழுந்திருந்தாள்.
(எட்டிணைப்போது) ஸர்வகாலமும் என்மடி யொழியச்செல்லாத
வளுக்குக்கிடீர் க்ஷணகாலமும் பொருந்தாதொழிகிறது. (என்கு
டங்கால்) பெற்றதாயான வென்மடி பொருந்தாதபடி துஸ்ஸ்திகை
யைப் பண்ணின §(படியையுடைய) வனுரோ வென்கிறாள். † ரக்ஷ்
பத்தோடி ரக்ஷகையோடி வாசியற ஸம்பந்தமற்றபடி. அபிமதவிஷ
யங்களோடி பூஜ்ய விஷயங்களோடி வாசியற ஸம்பந்தமற்றபடி.

(இருக்ககில்லாள்) உறங்குகை அபேக்ஷிதமல்லாமையாலே
*எழுந்திருந்தாகிலு மிருக்குமோ வென்னும் நசையாலே அணைத்து
மடியிலே யிருத்தப்பாத்தாள், அதுவும் பொருந்திற்றில்லை. (கில்
லாள்) சக்தையாகிறிலள். என்முகத்தில் பயிர்ப்பைக்கண்டு இருக்க
த்தேடினாலும் அதுக்கு சக்தையாகிறிலள். † ஏதேனுமளவிலும் தன்
மகளைக் குறைசொல்லுமவளன்றே; † நெருப்பிலே கிடக்க ஆசை
யுண்டானாலும் மடியிற்கிடக்கப்போகாதிறே.

இப்போது உறங்காளென்னுமல், கேவலம் (உறங்காள்) என்று ஸாமாந்
யேந உறக்கத்தை நிஷேதிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஸம்ஸ்லே
ஷதசையிலித்யாதி).

ரக்ஷ்யம் மாநமாகையாலே, ரக்ஷகையானதாயோடு வாசியறவுறவற்றபடி.

தன்மடி அஸஹாயமா யிருக்க, (கில்லாள்) என்று இவளுக்கு அபேக்ஷை
தோற்றச் சொல்லுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஏதேனுமளவித்
யாதி). ஆசையுண்டானால் இருக்கக்கூடாதோவென்ன; அருளிச்செய்கிறார்
(நெருப்பிலே யித்யாதி).

---

§ குண்டலிதம க்வாசித்கம். * (பா) எழுந்திருந்தாளாகி லிருக்குமோ.

கூசு திருநெடுந்தாண்டகம்-கக-பா-பட்டுடுக்கும் வ்யாக்யாநம்.

இத்தால் - ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் விரக்தி ஜ்ஞாததயாவ
தகன்று, ஸத்தாப்ரயுக்தமென்னை. பகவத்ப்ரேமம் ஸத்தாப்ரயுக்த
மானவோபாதி இதரவிஷயத்தில் விரக்தியும் ஸத்தாப்ரயுக்தமா
யிறே யிருப்பது.

அவ்வளவேயோ, (எம்பெருமானித்யாதி) என்னை அநந்யா
ஹமாக்கினவன்கோயில் எங்கேயென்கிறாள். பாணவையோடி தா
மடியோடிவாசியறப் புறம்புள்ளதுவக்கை யறுததவனூர் எங்கே
யென்ன நின்றாள். இன்னருடைய கோயிலெங்கேயென்று அவன்
பேரைச் சொல்லாதே (எம்பெருமான்) என்பானென்னென்னில்
இயற்கையில் புணர்ச்சியாகையாலே ஸ்த்ரீத்வ பும்ஸ்த்வங்களே வே
தவாகக் கலந்த தித்தனையிறே. ஜ்ஞாபகருண்டாய்க் கலக்கிலிறே
பேரறியலாவது. அவனூர் கோயிலென்றறிந்தபடி யென்னெ
னில்; ஸம்ஸ்லேஷதசையில் பிரிவைநினைத்து, "பிரியேன், பிரியே
தரியேன்" என்று பிரிவைபரஸங்கிக்கிற வளவிலே இவள் தரி
திருக்கவேணுமென்று, "நம்மூர்கோயில்" என்று ஊரை ப்ரஸங்கி
தான், அத்தாலே, ஊர்கோயில் என்கிறாள். (எம்பெருமான்) எவ
க்குத் தன்னை எழுதித்தந்து என்னை யெழுதிக்கொண்டவன். (தி
வரங்க மெங்கேயென்னும்) கோயில் மேற்கேயென்றறியுமே. எ
கே யென்பானென்னென்னில்; ஆற்றாமையாலே கண்ணுஞ் சுழ
யிட்டு திக்ப்ரமம் பிறந்தால் பின்னை திக்குத்தேடவேண்டியி
யிருப்பது.

(மட்டவிக்கியித்யாதி) அவனை இப்படி படுத்தக்கடவ மயிர்
டியையுடையவள்கிடீர் அத்தலையித்தலையாய் இப்படி நோவுப
றாள். † செவ்வைப்பூசலிலேயிறே அவன் நோவுபடுவது, † வஞ்சந
தே அகப்பட்டாளா மித்தனை யென்கிறாள். (மட்டவிக்கி) பெரி
அபிநிவேசத்தோடே மதுபாநம்பண்ண விழிந்து விடாயின் மிகு
யாலே விக்கினபடியைச் சொல்லுதல்; மதுபானம்பண்ணி தேறி
ளையாகப் பாநம்பண்ணின விடததிலும் அபிநிவேசம் மாளாதப
யாலேதரித்து இறிய அவகாசமில்லாதபடியாலே விக்கினபடியை
சொல்லுதல்; ஸாரஸ்யததாலே உள்ளிழிச்சவும்மாட்டாதே உமி
வும்மாட்டாதே நடுவேநாக்கடியிலே வைத்திருக்கிறபடியைச் சொ

அவனுக்கு நோவில்லையோ வென்ன; அருளிச்செய்கிறார் (செவ்வைப்
சலிலேயித்யாதி). செவ்வைப்பூசல் - இவளழகு அவன் நெஞ்சிலே படுகை
(வஞ்சநம்)=அவனழகு இவள் நெஞ்சிலே படுகை. இத்தால் - இயற்கைப்பு
ர்ச்சியாகையாலே இவளழகு தன்னெஞ்சிலேபடாமல் தன்னழகு இவள்
ஞ்சிலேபடும்படி வஞ்சித்துக்கலந்தானென்றபடி.

திருநெடுந்தாண்டகம்-கக-பா-பட்டுடுக்கும் வ்யாக்யாநம். கூரை

லுதல். † மநுஷ்யர்க்கு அந்நபாநங்களிரண்டும் தாரகமாகையாலே, அந்நத்தாலே விக்கிலல் நீராலே ஸமாதாநம்பண்ணலாம், மதுவ்ரத மாகையாலே மதுவாலே விக்கிலல் மதுவையிட்டு ஆச்வஸித்தல், தரிருதல் செய்யுமித்தனையொழிய த்ரவ்யாந்தரத்தால் ஆச்வஸிப் பிக்க வொண்ணாதிறே. (க)" † பரிம்விஶ்வஸ்ய - பதிம்விஶ்வஸ்ய" என் கிறபடியாலே ப்ரதிவ்ரதைக்கு வந்த ஆபத்தைப் பதிதானே போக் குமதொழிய விஷயாந்தரங்களாலே பரிஹரிக்கவொண்ணாதிறே. உ

(மணிவண்டு) ரஸாயநஸேவை பண்ணிறற்போலே நரை திரை மூப்பு அற்றிருக்கிறபடி. (உ)" அரும்பினையலரை" என்கிற விஷ யத்திற்கு ஸ்மாரகமா யிருக்கிறதாயிற்று. இவளுடைய மயிர்முடியை க்கண்டி (ங) "தூவியம்புள்ளுடைத் தெய்வவண்டி" என்கிறபடியே ஒரு *தெய்வவண்டி படி மலமாப்புக்கு ஸ்மாரகமாயிருக்கிறதாயிற்று, இவள் குழலில் மதுவாலே வண்டிகள் படிமலமாப்பு. (முரலும்) மதுவைக்கழுத்தே கட்டளையாகப் பாரம்பண்ணின ப்ரீதிப்ரகர்ஷத் தாலே இருக்கிற விடத்திலே யிருக்கமாட்டாமையாலும், வாய்வி ட்டுக் கூப்பிடமாட்டாமையாலும ஆளத்திவைக்கிறபடி. (மடமானை) எனக்கு பவ்யையானவள் கிடீர் இப்போது அபவ்யையாயிருக்கி றாள். அங்ஙனன்றியே, மடப்பமென்று - ஸ்த்ரீத்வமாய், கிருபா கிகஸ்த்ரீத்வத்தையுடையவளென்னவுமாம். தனக்கு ஆற்றாமை மீதூர்ந்தாலும் அது பிறர்க்குத் தெரியாதபடி யடக்கி அதிகருதை பாயிருந்து எதிர்த்தலையை விக்ருதமாக்கக் கடவ விவள்கிடீர், "எம் பெருமான் திருவரங்கமெங்கே" என்று வாய்விட்டுக் கூப்பிடுகிறாள். (இது செய்தார்தம்மை) இவளுடைய தசாவிசேஷம் பாசுரமிட் டுச் சொல்லப்போகாமையாலே கடலைக்காட்டுமாபோலே (இது) என்று கையாலேகாட்டுகிறாள். (இதுசெய்தார்) † பண்டுநான் ஒப்பி த்துவிட்டால் அவ்வொப்பனைகுறியழியாதேவரும்; இப்போது இக் குழலை ஆத்தஸாரமாக்கினவளோ வென்கிறாள். அங்ஙனன்றியே, இவள்மயிரில் பூவைச் சருகாக்கி வண்டுகளைப் பட்டினிகொண்டவ

விக்கிலல் வேறொன்றாலே ஸமாதாநம் பண்ண வொண்ணாதோ வெ ன்ன; அருளிச்செய்கிறார் (மநுஷ்யர்க்கித்யாதி). இத்தால் பலிதத்தை இவ ளிடத்திலேயேறிடுகிறாள் (பதிம்விஶ்வஸ்யேத்யாதி).

(இதுசெய்தார்) மூன்றுதாத்பர்யம்.

(க) புருஷஸூ. (உ) தி-மொ-எ-கஎ-க. (ங) தி-வாய்-கூ-கூ-ஸ்.

ணரோ வென்னுதல். (தம்மை) இவருடைய அவஸாத்தைக்
ண்டு அவனுடைய வைலக்ஷண்யத்தைத நிலையிடுகிறாள். இவளை
பாடுபடுதின ஸௌபாக்யத்தை யுடையவருமொருவரே! (தம்
இதென்னஸௌபாக்யம். அவர் எம்மடிவிலே வளர்ந்தாரோ! (
மை) இவளை இப்படி ப்ரணயித்வத்தில் தேஹிகையாக்கின பா
ணயியாரோவென்கிறாள். † இவ்வாற்றுமையை விளைப்பித்தது
ஹ்யமாகில் இது செய்தவனைச் சொல்லவேணும், அது தமக்கு
மென்னுமிடம் ப்ரகாசிக்கிறதாயிற்று - (தம்மை) என்கையாலே

(மெய்யே கட்டுவிச்சிசொல்) யதார்த்தத்தைச்சொல். க
விச்சி, ஸத்யவாதியென்று ப்ரஸித்தை § யாயிருக்க யதார்த்
தைச் சொல்லென்பானென்னென்னில்; இயற்கைப் புணர்ச்
கையாலே நேராகச்சொல்லவொண்ணுதென்றிராதே, இது எ
கபிமதம், உள்ளபடி சொல்லென்கிறாள். †சிகித்ஸிக்கும்போது
ளபடி யறியவேணுமிறே. (சொல்லென்னைச்சொன்னாள்) நெடு
அநுவர்த்தித்துக் கேட்கவேண்டும் வார்த்தையை ஏவச்செ
னாள். எமபெருமானைபோலேயும் கீதோபநிஷதாசார்யரை
போலேயுங்காணும் இக்கட்டுவிச்சிவைபவமிருப்பது; - செவிதா
தார்க்கெல்லாம் வார்த்தைசொல்லிப் போந்தார் - உடையவர்;
யைப் பிறபபித்து வார்த்தைசொல்லிப்போந்தான் - கீதாட
தாசார்யன். (சொன்னாள்) தென்றலும் சிறுதுளியும்போலே இ
கோரார்த்தம்வேணுமோ? இப்பாசுரமே யமையாதோவென்னும்
காணும் வார்த்தைசொன்னசீர்மையிருந்தபடி. (சொன்னாள்) எ
குக் கேட்கை தேட்டமாறற்போலேகாணும் இவருக்குச் செ
லுகை தேட்டமாய்ச் சொன்னபடி. † ஆசார்யனுக்கு பகவத
ப்ரீதிக்குப் பரிவாஹராபேக்ஷை யுண்டாகையாலே ஆள் தேட்

(தமனை) வடிவின் வைலக்ஷண்யமாதல், அவன்ஸௌபாக்யமாதல்
ணயித்வத்தால் வந்தவைலக்ஷண்யமாதல். தாய்க்கு அபிமதமென்ன
ஜ்ஞாபகங்காட்டுகிறார் (இவ்வாற்றுமையித்யாதி).

உள்ளபடி சொல்லவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார்
த்ஸிக்குமபோதித்யாதி). § (இவளைத் தன்விஷயத்திலே ப்ரவணமாக்கு
அவன் இவருக்குப்பண்ணின சிகித்ஸாப்ரகார மென்றபடி.) கேட்டவு
சொல்லவேண்டுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஆசார்யஜ
...

---

§ (பா) யாகில்.

§ குண்டலிதம் ஸந்திக்கத்தம்

திருநெடுந்தாண்டகம்-கக-பா-பட்டுக்கும் வ்யாக்யாநம். கூகூ

யிறே யிருப்பது. சிஷ்யன் கேட்டுத்தரிக்கக்கடவன், ஆசார்யன் சொல்லி தரிக்கக்கடவன். இவனுக்குக் கேட்டகை உஜ்ஜீவநஹேது; அவனுக்குச் சொல்லுகை போகஹேது.

(நங்காய்) அவள்சொன்ன வார்த்தை சொல்லலாம்படி புறம்பு கையொழிந்திருக்கும்படியான பூர்த்தியுண்டிறே. அவளுக்கு நான் தேட்டமாணைம்போலே காண் எனக்கு நீதேட்டமானபடி. அவள் சொன்ன வார்த்தைதானேதென்ன; சொல்லுகிறாள் (கடல்வண்ணனிதுசெய்தார்) † * எம்பெருமான் திருவரங்கமெங்கே யென்றாள் - அவள்; இவள் (கடல்வண்ணனார்) என்று-பெரியபெருமாளைச் சொல்லுகிறாள். இங்கு கடலின் ஸ்வபாவத்தைசொல்லுகிறதன்று, நிறத்தைச் சொல்லுகிறது.

ஸ்வரூபத்திலே புகாதே குணத்திலே புகாதே வாயகனையிலே யழுந்திணைளென்கிறாள். ஒருகாலணைத்துவிட்டான்போலேகாணும், அவ்வடிவிலே யகப்பட்டாள். † ஸ்வரூபத்திலே இழிந்தார்க்கு குணங்களிலேயிழியவேணும், உபயத்துக்கும் பரகாசகமான விக்ரஹத்திலே யிழிந்தார்க்குப புறமபுபோகவேண்டாவிறே. ருசிஜநகமாயிருபபதும் வடிவே, ஆஸ்ரயணீயமாயிருப்பதும வடிவே, போக்யமாயிருபபதும் வடிவேயிறே.

(இதுசெய்தா) (க) * தீராநோய்செய்தார். (இது) நீறேறுண்டு மோஹித்தாளை வடிவிலே தெரியுமாபோலே நோய் இவள்வடிவிலே தோற்றுகிறபடி. இந்நோய் பெரும்பேறென்னுமிடந்தோற்ற (இது) என்கிறாள். (உ) * தெய்வநன்னோயிறே. தெய்வமடியாகவந்த நோயாகையாலே விலக்ஷணமான நோயிறே. † நாடாடார் புருஷார்தத மென்று ஸாதிக்கிற வித்தை நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதத்தாலே பெற்றவளன்றோ இவள். (ங) "ஜந்துர்நரஸமாஸ்ரேஷு-ஜ்மாந்தரஸஹஸ்ரேஷு" இத்யாதியிற் சொல்லுகிறபடியே ஸாதநாந்தர நிஷ்டர்க்கு அநேகஜந்மஸாத்யையான பக்தி இவளுக்கு நிர்ஹேதுக பகவத்ப்ரஸாதத்தாலே ஸித்தித்ததிறே. † உபாஸகனுக்கு ஸாதநத்தினு

நாயகிகட்டுவிச்சி, இருவர்க்கும் நினைவொன்றென்னுமத்தை அருளிச்செய்கிறார் (எமபெருமானித்யாதி.)

ஸ்வரூபகுணங்களிருக்க விக்ரஹத்திலே யிழிவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஸ்வரூபத்திலேயித்யாதி).

நோயென்று - பக்தியாய், அதுக்கு வைலக்ஷண்யமேதென்ன : அருளிச்செய்கிறார் (நாட்டாரித்யாதி). ப்ரபந்நர்க்கு பக்திவேணுமோவென்ன; அருளிச்செய்கிறார் (உபாஸகனுக்கித்யாதி).

(க) சிறியதிருமடல் - குஉ. (ங)
(உ)

டைய மேலெல்லையாய் ப்ரபந்நனுக்கு ப்ராப்யத்திலுடைய முதல யாயிறே பரமபக்தியிருப்பது.

(கடல்வண்ணரிதுசெய்தார்) ஒருவடிவைக்காட்டி ஒருவடிவை க்கொண்டார். (க) † "நஜீவேயம்க்ஷணமபி-நஜீவேயம்க்ஷணமபி" என கிற வடிவைக்காட்டி, (உ) "ஊர்த்வம்மாஸான்ன ஜிவிஷ்யே - ஊர்த்வ மாஸாந்நஜீவிஷ்யே" என்கிற வடிவைக்கிடீர் கொண்டது. (காப்பா ராரோ) ரக்ஷகனல்வந்த ஆபத்தை உங்கள் வேராலும் மந்த்ரத்த லும் பரிஹரிக்கப்போமோ? † விஷயாந்தரங்களால் வந்தநோவு ப வத்விஷயத்தைக் கிட்டிப்போக்கலாம், பகவதவிஷயமடியாக வ நோவுஸ்வரூபபராப்தமாகையாலேயாவதாத்மபாவி அநிவர்தயமி

(கடல்வண்ணரிதுசெய்தார்காப்பாராரோ) கடல்கொண்ட வ தவைக் கடலே * வீசவேண்டாவோ? (காப்பாராரோ) இவள பரிஹரிக்கப்போமோ? † உன்னல் பரிஹரிக்கப்போமோ? பிறரா பரிஹரிக்கப்போமோ? வேலிபே பயிரையழித்தால் வேலிதான் ரே க்குமித்தனையொழியப் பயிராலே நோக்கிக்கொள்ளபோமோ?

இத்தால், ஸ்வாபதேசமாயிற்றது - நிர்ஹேதுகவிஷயீகார தத்கார்யமான ப்ரேமாதிசயம், தத்கார்யமானவிரக்தி, ஆசார்யோ தேச பூர்வகமாக ஜ்ஞாநஸித்தி ஆகிறவிவை ... ... (க

மூ.—நெஞ்சுருகிக்கண்பனிப்பநிற்கும்சோரும்
நெடுதுயிர்க்குமுண்டறியாளுறக்கம்பேணுள்
நஞ்சரவில்துயிலமர்ந்தநம்பீயென்னும்
வம்பார்பூம்வயலாலிமைந்தாவென்னும்
அஞ்சிறையபுட்கொடியேயாடும்பாடும்
அணியரங்கமாடுதுமோதாழீயென்னும்
என்சிறகின்கீழடங்காப்பெண்ணேப்பெற்றேன்
இருநிலத்தோர்பழிபடைத்தேன்னபாவமே. (க

வடிவுக்கு வடிவு ஸமமாலல் துக்கமேதென்ன; அருளிச்செய்கி (நஜீவேயமித்யாதி). "ஊர்த்வம்மாஸாந்நஜீவிஷ்யே" என்னுமபடியான வடிவைக்காட்டிக் கிடீர் "நஜீவேயம்க்ஷணமபி" என்று வாய்புலத்தும யான இவள்வடிவைக்கொண்டதுஎன்றுவாக்யத்தை அந்வயித்து யோஜிப்

விஷயாந்தரப்ராவண்யத்தோபாதி இத்தைப்போக்க வொண்ணுமே (ஆர்-காப்பார்) என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (விஷயாந்த ள்ளித்யாதி).

(காப்பாராரார்) என்று-கட்டுவிச்சி வார்த்தையாகையாலே தாயான ளல் பரிஹரிக்கப் போமோவென்றபடி. ... .

(க) ரா-ஸு-சுந்த-கo. (உ) ரா - ஸு-நகி-சுள.
* (பா) கரை யேற்றவேண்டாவோ.

பதம.—நெஞ்சு, உருகி, கண், பனிப்ப, நிற்கும், (நு) சோரும், நெடுதுயிர்க்கும். உண்டறியாள், உறக்கம்பேணாள், நஞ்சு, (கo) அரவில், துயில்அமர்ந்த, நம்பீயென்னும், வம்புஆர், பூ, (கநு) வயல், ஆவி, மைந்தாவென்னும், அஞ்சிறைய, புட்கொடி, (உo) ஆடும், பாடும், தோழீ, அணி, அரங்கம், (உநு) ஆடுதுமோ, என்னும், என்சிறகின் கீழ்அடங்கா, பெண்ணைப் பெற்றேன், இருநிலத்து, (ஙo)-ஓர்பழிபடைத்தேன், எபாவமே. (ஙஉ)

• உரை.—மநஸ்ஸானது, (நீர்ப்பண்டமாக) உருகி, கண்களினின்றும், தாரைதாரையாகவிழ, அசைவற்றுநிற்கிறாள்; (நு) மோஹங் கதையாகிறாள்; நெடு மூச்சு விடாநின்றாள்; போஜநம்செய்தறியாள்; உறக்கத்தை ஆதரியாள்; விஷத்தை உமிழாநின்றாள்ள, (கo) திருவனந்தாழ்வான்மேலே, யோகநித்ரைபண்ணுகிற, பூர்ணனே ! என்றுசொல்லாநின்றாள்; பரிமளம் மிக்கிருந்துள்ள, புஷ்பங்களையுடைய, (கநு) வயல்கள் சூழ்ந்த, திருவாலியி லெழுந்தருளியிருக்கிற, யுவாவானவனே! என்று சொல்லா நின்றாள்; அழகிய சிறகையுடைத்தான, கருடத்வஜத்தை, (உo) அநுகரிக்கும்; காநம்பண்ணும்; என் உயிர்த் தோழியே! (ஸம்ஸாரத்துக்கு) ஆபரணமான, கோயிலிலே போய், (உநு) அவனுடன் ஸம்ச்லேஷிக்கப் பெறுவோமோ, என்றுசொல்லாநின்றாள்; என்கைக் கடங்காத, பெண்ணைப் பெற்றேன்; இந்தமஹாப்ருதிவியிலே, (ஙo) ஒப்பற்ற பழியைலபித்தேன்; நான் செய்த பாபமே! (ஙஉ)

வ்யா.—பன்னிரண்டாம்பாட்டு. (நெஞ்சுருகி) (க) "கடல்வண்ணர்" என்று கட்டுவிச்சி திருநாமத்தைச் சொல்லுகையாலும், அத்தைத் திருத்தாயார் அநுபாஷித்தும்; வினவவந்தார்க்குச்சொல்லியும், இவள்தான் வாய்வெருவிறற்போலே, (க) "எம்பெருமான் திருவரங்கமெங்கே" என்று தன்வாயாலே திருநாமத்தைச்சொல்லுகையாலும், பூர்வாவஸ்தையிற்காட்டில் சிறிதுணர்த்திபிறந்தது, அவ்வளவிலும் அபிமதன் வந்து முகங்காட்டாமையாலே அதுவும் ஆற்றுமைக்குடலாய் இடைவிடாமல் கூப்பிடத் தொடங்கினள்; அத்தை வினவவந்தார்க்குச்சொல்லி இன்னதாகிறாள். இவளுடையக்லேசம்நின்ற நிலையிது, † ஸ்வரூபஹாநிநின்றநிலையிது, எனக்கு அவ்வையயானபடியிது, இத்தனைக்குமடி என்பாபமிறேயென்று அவர்களுக்குச் சொல்லி இன்னதாகிறாள். ‡ லோகாபவாதம் பரிஹரிக்கச்

பன்னிரண்டாம்பாட்டு. (நெஞ்சுருகி) (நம்பீ) என்று நாமக்ரஹணம் பண்ணுகை ஸ்வரூபஹாநி. கீழ்ப்பாட்டில் இவளாற்றுமை ஹார்த்தமாக இவ்விடமாயிருந்தவள் இப்போது இன்னதாகவேண்டுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (லோகாபவாதமித்யாதி).

சொல்லுகிறூளித்தனேபோக்கி அகவாயில் இவ்விஷயத்தில் இவரு டைய அவகாஹநம் தனக்கு அநிஷ்டமாயிருக்கிறதன்றிறே.

(நெஞ்சித்யாதி) கீழிற்பாட்டில் "இரங்கும்" என்ற இரக்கத்தி னுடைய வகைகளிருகிறபடி. (நெஞ்சுருகி) நிரவயவமான மநஸ் தத்வம் நீர்ப்பண்டமாகா நின்றது. அக்நிஸகாசத்திலே மெழுகு போலே விரஹாக்நியாலே த்ரவதரவ்யமாகா நின்றது. † லௌ கிகாக்நிக்கு உருகாதென்றால் விரகாக்நிக்கு உருகாதாழியுமோ? விரஹாக்நிக்குருகாதபோது § ஜ்ஞாநதவாரா பரஸ்ரமின்றியிலே யொழியக்கடவதிறே. (கண்பனிபப) அது உள்ளடங்காமையாலே பரீவாஹரூபத்தாலே புறபடுகிறபடி. அந்தஃகரணமுருகி பாஹ்ய கரணத்தாலே புறப்படுகிறபடி. (நிற்குமசோரும்) அவையிரண்டி னுடையகார்ய மிருக்கிறபடி. க்ருதயாக்ருத்யவிவேகம் பண்ணமாட் டாமையாலே ஸ்தபதையாய்நிற்கும்; க்ருத்யாக்ருதயவிவேகத்துக் கடியான நெஞ்சழிகையாலே ஒரு வ்யாபாரசக்தமையன்றியே நிற் கும். (க) † "श्रुत्वा श्लोकं नरस्थितः - ஶத்ருகோநாநந்தரஸ்த்திதः" என்னக்கடவதிறே. † ஸ்வாமி தரைபபட்டுக்கிடந்து ப்ரலாபியா நிற்கச் சேஷபூதன் தரித்து நின்று னென்னை ஓர்த்தமன்றே. க்ருத் யாகருத்ய விம்வகம பண்ண மாடடாமையாலே ஸ்தபதையாய்நின்று னென்னை. இவனுடைய ப்ரலாபத்தைத் தவிர்க்கமாட்டான், டெ ருமாளை யழைகமாட்டான்; ஆகையாலே ஸ்தபத்தையாய்நின்றுனெ ன்னை. (சோரும) ஓராலம்பநம் பெறிலிறே ஸ்ததிதையாய் நிறக லாவது, அதில்லாமையாலே மோஹங்கதையானாள். க்ருத்யாக்ருதய் விவேக மின்றியிலேயொழிந்தாலும் ஒருபரவ்ருததி பண்ணலா வது † கண்ணுண்டாகிலிறே, அதழிகையாலே மூச்சடங்கினள்.

(நெடிதுயிர்க்கும) உள்ளுண்டான சோகாவேசததாலே ப மூச்செறியா நிற்கும். கோடரததிற்பற்றின அக்நிபோலே அந் கரணத்தையுருக்கி விடுமளவன்றியே தச்சேஷம் நெடுமூச்சாய்ப ட படாநின்றது. (உ) "दह नीलिवनिश्वासैः वृक्षान् पल्लवधारिणः-த் தீமிவநிஶ்வாஸைः வ்ருக்ஷாந்பல்லவதாரிணः" என்னக்கடவதிறே திருவடி, லௌகிகாக்நியாலே உளைச்சுட்டான், இவள் விரஹாக் யாலே அசோகவநிகையைச் சுட்டாள். (உண்டறியாள் உறக்க

நிரவயவமாய் அதனவ அதாஹயமான நெஞ்சு உருகக்கூடுமோவெ ன்ன; அருளிச்செய்கிறார் (லௌகிகாக்நிக்கித்யாதி).

க்ருத்யாக்ருத்ய விவேகம் பண்ணமாட்டாமல் நின்றவிடமுண்டோவெ ன்ன; அருளிச்செய்கிறார் (சத்ருக்ந இத்யாதி). கண்-சாடு.

"अन नरसिंह-அநந்தர ஸ்த்திதः" என்று தரித்துநிற்கையையன்றேகாட டுவது, ஸ்தப்த்தனுகையைக் காட்டும்படி யென்னென்ன; அருளிச்செய்கிறா

(க) ரா-அயோ. (உ) ரா-ஸு-க-உக.

§ (பா) ஜ்ஞாநப்ரஸரத்வாரமின்றியிலே.

பேணுள்) தன்காரியம் தலைக்கட்டினபடியிது, என்காரியத்தில் இவள் நின்றநிலையிது. இவளுடைய ஊணுமுறக்கமும்போலேகாணும் - தனக்கு உத்தேச்யம்.

(உண்டறியாள்) உண்கிறிலளென்கையன்றியே முதலிலே ஊணே மறந்தாளென்கிறாள். ஸம்ச்லேஷ தசையில், (க) "உண்ணுநாள்பசியாவ தொன்றில்லை" என்றும், (உ) "உண்ணுஞ்சோறு பருகுநீர்தின்னும் வெற்றிலையுமெல்லாங்கண்ணன்" என்றுமிருக்கையாலே ஊணில்லை; தத்விச்லேஷத்தில் உபவாஸக்ருசையாயிருக்கையாலே ஊணில்லை.

(உறக்கம்பேணுள்) நித்ரையைக் காற்கடைக் கொள்ளாநின்றாள். (ங) "பட்டுடுக்கும்" என்று - அவன் ஆதரித்த வுடையென்றன்றே நீ அவ்வுடை யுடுக்கத் தொடங்கிற்று, அவ்வோபாதி அவனாதரித்த உடம்பன்றே உன்னுடம்பு, அவன் வந்து முகங்காட்டினால் தண்போக்ய மழிந்ததென்று விஷண்ணைகாதபடி உன்னைளகுமார்யத்துக்கு அநுகூலமாக வருந்தியாகிலு முறங்கவேணுங்காணென்ன, அவற்றையும் அநாதரியாநின்றாள. (பேணுள்) என்கிறவிது - வருந்தியாகிலு முறங்கவேணுமென்று சொன்னதைதக காட்டுகிறதிறே. (ச) "அநாதிமாயயாஸுப்ர- அநாதிமாயயாஸுப்த" என்கிறபடியே பகவத்விஷயத்தைக்கிட்டுவதுக்கு முன்பு உணர்த்தி யறியாதாப்போலே பகவதவிஷயத்தைக் கிட்டினல்உறக்கமறியா திருக்கக்கடவ[1]

(நஞ்சித்யாதி) தன்ப்ரயோஜநமுங்கிடக்க என் ப்ரயோஜநமுங்கிடக்க ஸ்வரூப மழிந்தபடி பார்க்கலாகாதோ வென்கிறாள். [2]அபி மதவியோகத்தால்வந்த வாற்றுமையாலே அகவாயழியாநிற்கச் செய்தேயும் அதனைப் பிறரறியாதபடியடக்கிப பொறிபுறந்தடவி எதிர்த்தலையை யழிப்பிக்கையிறே ஸ்தரீதவலக்ஷணம், அது தவிர்த்து வாய்விட்டுக்கூப்பிடாநின்றாள். (ஙு)[3]"எம்பெருமான் திருவரங்கமெங்கே" என்று அத்தை வாய்வெருவினளென்று நினைத்திருந்தோம், அதுபோய் இடைவிடாமல் வாய்புலத்தத் தொடங்கினள். முன்பு (ங) "திருவரங்கம்" என்று ஊரைச்சொன்னள; கட்டுவிச்சி,

---

(ஸ்வாமியித்யாதி). (அபிமதவியோகத்தாலித்யாதி). முன்னும் வாய்விட்டாளே, இங்குவாசியேதென்ன; அருளிச்செய்கிறார் (எம்பெருமானித்யாதி).

(க) பெரி-திரு-ங-க-சு.
(உ) தி-வாய்-சு-எ-க.
(ங) கக.
(ச) மாணே.
(ஙு) கக.

(க) "கடல்வண்ணர்" என்று - பெரியபெருமாளைச் சொன்னள்; இப்போது படுக்கையைச் சொல்லுகிறாள். முதல்படுக்கை கோயில் போலேகாணும் இவளுக்கு.

(நஞ்சரவில் துயிலமர்ந்தம்பீயென்னும்) தானழியாநிற்க எதிர்த்தலையைப் பேணுகின்றாள். (நஞ்சரவு) ப்ரதிகூலர்க்குக்கிட்டவொண்ணாதபடிக்கையாகப் பெறுவோமே!. (அரவு) படுக்கைக்குஸம்பாத்யமான லக்ஷணங்கள் ஸ்வதஸ்ஸித்தமாகப் பெற்றோமே. மென்மை, குளிர்த்தி, நாற்றமென்கிற விவை ஜாதிப்ரயுக்தமாயிறே ஸர்ப்பத்துக்கிருப்பது. சேதநமான படுக்கையுமாகப் பெற்றோமே. (உ) "ப்ரக்ருஷ்டவிஜ்ஞானபலைக தாமநி- ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநபலைக தாமநி" என்கிறபடியே அவஸ்தாநுகுணமாகக், குழைய வேண்டுமிடத்திலே குழைந்து உறையவேண்டுமிடத்திலே யுறைந்து கொடுக்கும் படுக்கையாகப பெற்றோமே. (துயிலமர்ந்த) படுக்கைவாய்ப்பாலேவீசி வில்லிட்டெழுபபிணலும் எழுந்திராதபடியாயாயிற்றுப படுக்கைவாய்ப்பிருக்கிறபடி. †நிர்ப்பயமாகக் கண்வளரப்பெற்றோமே போகரூபமாகக் கண்வளாந்தருளப்பெற்றோமே. பொருந்திகண்வளரப்பெற்றோமே.

(நம்பீயென்னும்) திருவநந்தாழ்வான்மடியிலே சாய்ந்தபின்பு தகட்டிலழுத்தின மாணிக்கம்போலே அழகால் வந்த பூர்த்தியைச் சொல்லுகிறது (ங) "ஸமயாபோதிதஶ்ரீமாந் ஸுகஸுப்தஃபரந்தபஃ" என்று ஆலத்திழிக வேண்டும்படியிறே உறங்கும்போதை யழகிருப்பது. அதவு (நஞ்சிதயாதி) ப்ரணயரோஷந்தோற்ற வாய்விடாகின்றாளென்கிறளாகவுமாம். நஞ்சரவு - ப்ரதிகூலர் கிட்டாமைக்கு நஞ்சை யுமிழ்கிறானென்றிருந்தோம், அதுவொருவ்யாஜமாய், அவ்வஸ்துவையொழியசெல்லாதார்கிட்டாதபடி நஞ்சையுமிழும்படியாவதே! பிராட்டிகையின் ஸ்வபாவம். அவனேது இன்னதாமதொழியப் படுக்கையேதுடின்னதாவானென்னென்னில; அவனேது தான் இன்னதாகைக்கு ஹேது அவர்ஜநீய ஸம்பந்தமும் போக்யதையு மன்றோ; அவ்வோபாதி ததீயரோடும் அவர்ஜநீய ஸம்பந்தமும் போக்யதையு முண்டாகையாலே படுக்கையிலிலயிறே. அவனுடைய அநந்யார்ஹ ஶேஷத்வததிலே அந்தர்ப்பூதமிறே ததீயஶேஷதவமும்; அவனுடைய போக்யதையிலே அந்தர்ப்பூதமிறே ததீயருடைய போக்யதையும். ஆகையாலே படுக்கையோடு கிலாய்க்கை பராப்தம். (துயிலமர்ந்த

(நஞ்சரவு) என்றதைப்பற்ற அருளிச்செய்கிறார் (நிர்ப்பயமாகவித்யாதி

(க) ககக.

(உ) ஸ்தோ-ர-நகக.

(ங) ரா-ஸு-நஅ-உங.

இருவருக்குப் படித்த படிக்கை ஒருவர்க்குப் * பொருந்துவதே! எனக்குத் தாய்மடி பொருந்தாதிருக்கத் தமக்குப் படிக்கை பொருந்துவதே!.* பரமப்ரணயிகளாயிருக்கிற தம்முடைய ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமென்கிறாள். (நம்பீயென்னும்) இத்தலை வெறுந்தலையாயிருக்க அத்தலை குறைவற்றிருக்கிறபடி.

. (வம்பார்பூமித்யாதி) அப்படிக்கையோடேசேருகைக்கு பாணிக்ரஹணம்பண்ணின தேசதத்தைச் சொல்லுகிறது. பரிமள ப்ரசுரமான பூவை யுடைத்தான வயல். அவனுடைய யுவதவம் நித்யமாயிறேபோலே வயலும் நித்யவஸந்தமா யிருக்கிறபடி. தம்முடைய (க) "அரும்பினையலரை" என்கிற பருவதத்துக்கு அநுகூலமாக நித்யவஸந்தமான வயலாகப் பெற்றோமே. அதவா, நானிருக்கிற தேசம் நீரும் பூவும் பரிமளமுமினறிக்கே வறண்டு தரையாய்க்கிடக்கத், தானிருக்கிறதேசமகப்படத் தளிரும் முறியுமாம்படியாவதே!. அவனுடைய † செந்தளிப்பேயிறே அத்தேசத்துக்கும் செந்தளிப்பு. அப்படியே தன்னுடைய செந்தளிப்பாயிருக்குந் தேசமாகையாலே தான் உருவுகையாலே அத்தேசமுமுருவிக் கிடக்கிறதிறே. (மைந்தாவென்னுமே) என்னையுமேபகூஷிக்கப் பார்த்தால் தன் பருவத்தைக் காட்டி என்னை அநந்யார்ஹ மாக்குவானென்? † அடியிலே நான் விஷயப்ரவணனுய்த் திரிய, (க) "வாடினேன்" என்று சொல்லும்படி உன் † போக்யதையைக்காட்டிப் புறம்புள்ளதுவக்கையறுத்து உன்னையொழியச் செல்லாதபடிபண்ணிற்று, இன்று என்னைக்கைவிடுகைக்கோ?

(அஞ்சிறையபுட்கொடியே யாடும்பாடும்) பாணிக்ரஹணம்பண்ணிவைக்கக்கொண்டுவந்த விஶ்வாமித்ரனைச் சொல்லுகிறது. அழகிய சிறகையுடைய பெரியதிருவடியாகிற த்வஜத்தை அநுகரியாகின்றுள். † வந்தால் ப்ரியப்படுகையன்றியிலே வருகிறானென்று தூரதத்திலே கண்டால் விஶ்வஸிக்கும்படியிறே பெரியதிருவடியுடைய ஔதார்யமிருப்பது. பெரியதிருவடி தூரத்திலே தோற்றி ஆஶ்வஸிப்பிக்கும்படியை நினைத்துக் கொண்டிருந்தாள், அவன் வரக்காணுமையாலே அவனை யநுகரிக்கத் தொடங்கினுள். விடாய்த்தார் ஹஸ்தமுத்தரையாலே தண்ணீர்வேண்டுமாபோலே அவன்

(செந்தளிப்பு) - குளிர்த்தி. அநந்யார்ஹ யாக்கினபடியை அருளிச்செய்கிறார் (அடியிலே நானிதயாதி). பருவத்தால்வந்த போக்யதை.

விஶ்வாமித்ரனைப்போலே திருவடியும். (ஆடுகை) - அநுகரிக்கை. நாயகனை யநுகரியாமல் திருவடியை யநுகரிப்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (வந்தாலித்யாதி.)

(க) தி-மொ-எ-கo-க.* (உ) தி-மொ-க-க-க.

வரவில் தனக்குண்டான ஆகாங்ஷையுந்தோற்ற அவன்வரும்படி...
ள்.

(புட்கொடியேயாடும்) † பெரியதிருவடிமுதுகிலே அவன்வ...
வரும்படியைப் பாவிக்கையன்றியே கொடியையே பாவியாநின்றுள்...
(பாடும்) அவனை அநுகரிக்கையாலே பிறந்த ஆஸ்வாஸத்தாலே...
வாய்திறக்க வல்லளாய் ஆர்த்திதோற்றக்கூப்பிடத் தொடங்கினள்...
† பாட்டாவது - கண்ணுங் கண்ணீருமாய்க்கொண்டு கால் தாழ...
திருக்கும்படியான த்வனியிறே; அப்படியே இவளும் உரக்க ஆர்த்...
நாததாலே, (க) "மரங்களு மிரங்கும்வகை" என்கிறபடியே பி...
கால்தாழ்ந்து கண்ணுங் கண்ணீருமாயிருக்கையாலே (பாடு...
என்கிறது. †சோகரஸத்தோடு போகரஸதோடு வாசியில்லையிறே...
பிறரைக்கால்தாழப் பண்ணுகைக்கு.

(அணியரங்கமித்யாதி) இவளுடைய ஆர்த்தநாதத்தைத்...
ட்டதோழி, "தாயானவள் கடக்கநின்று ஹிதஞ்சொல்லுமவளாவ...
யாலே ஆஸ்வாஸகையாக மாட்டாள், நம்மூடைய ஸந்நிதி அ...
வாஸஹேதுவாமோ" என்று பார்த்து, (உ)"ஏகம்துக்கம்ஸுகஞ்சநௌ...
ஏகம்துக்கம்ஸுகஞ்சநௌ" என்றிருக்குமவளாகையாலே காய...
தலையும் க்ருசமானவடிவும் உருவினமுகமுமாய்க் கொண்டு தன்...
த்தியெல்லாம் வடிவிலே தோற்றும்படி முன்னே வந்துநின்று...
அவள்முகத்தைப்பார்த்துத், தோழீ! நாம்கோயிலிலேபோய்ப்...
ரியபெருமாளை யநுபவிக்க வல்லோமோ வென்கிறாள். (ங) "ஏஷ...

ஹ்ருப்ரவிஷ்டோ ஸ்ம்ருதீஸ்மீஹிதமிவஹ்ருதம் - ஏஷப்ரஹ்மப்ரவிஷ்டோவ...
க்ரீஷ்மேஸீதமிவஹ்ருதம்" என்று ஈஸ்வரனைத் தடாகமாகச்சொல்...
கடவதிறே. †தாபத்ரயாதுரர்க்குத் தாபஹரமாயிருக்கையாலும்...
ஹதாபாதுரர்க்கு விரஹதாபசாமகமா யிருக்கையாலும்(ஆடுதூ...
என்கிறாள். (அணியரங்கமாடுதுமோ) (ச)†"தொல்லை வேங்கடமு...
டவுஞ் சூழ்கின்றிலர்" என்று - கல்லைப்பொய்கையாகச் சொ...

அவதாரணத்தைப் பற்ற அருளிச்செய்கிறார் (பெரியதிருவடிமுதுகிலே...
த்யாதி). கூப்பீட்டைப் பாட்டாகச் சொல்லுவா னென்னென்ன; அருளி...
ய்கிறார் (பாட்டாவதித்யாதி). சோகமானகூப்பீட்டுக்குக் கால்தாழ்க்கக்...
மோ வென்ன, அருளிச்செய்கிறார் (சோகரஸத்தோடித்யாதி).

மதுரமாம்யமே தென்ன; அருளிச்செய்கிறார் (தாபத்ரயாதுரரித்யா...

ஊர்மதுவாமோவென்ன; அருளிச்செய்கிறார் (தொல்லைவேங்கட...

(க) தி-வாய்-கூ-(ரு)-கூ.
(உ) ரா-கி-(ரு)-கஅ.
(ங) பார-மோகஷ-ச-(ரு...
(ச) தி-வி:அக.

வல்லவர்கள் ஆற்றைப் பொய்கையாகச் சொல்லச் சொல்லவேணு மோ? † அநந்யார்ஹராய் அநந்யபோக்யரா யிருப்பார்க்கிறே இவ்வு நில் புகுந்தால் ஒருமடுவிலே புகுந்தாற்போலே ஸ்ரமஹரமா யிருப் பது. (தோழீயென்னும்) அவள்முகத்தில் பயிர்ப்பைக் கண்டு, "நாம் போய்க்கோயிலிலே யநுபவித்து நம்முகம் பண்டுபோலே செந்தளித் திருக்க நாம் காண்பதெப்போதோ?" என்னும்.

உன்வயிற்றிற் பிறந்தவளை ஸ்வரூபஹாநியிலே இழியப்புக் கால் நியமிக்கக் குறை யென்னென்னில்; (என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்) என்கைக் கடங்காத படியாளள். "ஆஸ்ர யணதசையில் அவன் மேல்விழுந்து ஆஸ்ரயிப்பிக்க, ஆஸ்ரயித்த வோபாதி, போகதசையிலும் அவன் செய்தபடி கண்டிருக்கை காண் ஸ்வரூபம், நீமேல்விழுகை ஸ்த்ரீத்வத்துக்குப் போராது காண்" என்று நானறிந்ததைச் சொன்னாலும் அத்தைக்காற் கடைக்கொள்ளா கின்றாள். (என்சிறகு) என்பகூத்திலே; என்னபி மாநத்திலேயென்றபடி. அவனபிமாநத்திலே யடங்கினவளாகை யாலே என்னபிமாநத்தை விட்டாளிறே. †ஸ்வரூபத்தை நோக்கினை ளல்லள், என்னபிமதஞ் செய்தாளல்லள், எனக்கு பவ்யையாளை ளல்லள். (பெற்றேன்) இதெல்லாம் இவள் குறறமாக்காதே பெறற தன் குற்றமாக்குகிறாள்.

(இருநிலத்து ஓர் பழிபடைத்தேன்) இவளைப் பெற்றதாலு ண்டான பேறு இதுவிறே. பஞ்சாசதகோடி விஸ்தீர்ணையானபூமிப் பரப்படங்கலும் வ்யாபதமாம்படியான பழியைப் படைத்தேன். தன்கார்யத்தே ப்ரவர்த்திக்கை குடிப்பழியாம்படியிறே இக்குடி யினுடைய வேற்றமிருப்பது. (ஓர்பழி) அத்விதீயமானபழி. (ஏ பாவம்) இவள் குறையுமன்று, அவன் குறையுமன்று, நான் பண் ணினபாபமே இதக்கு ஹேதுவென்கிறாள். (க) "நமந்தராயாஃ-நம ந்தராயாஃ" இத்யாதி. [நமந்தராயாஃ- நமந்தராயாஃ] இவ்வார்த்தத் துக்கெல்லாம் ஹேதுபூதை மந்தரையென்றுகொனையா, அவளுடைய தோஷமன்று; அவளவார்த்தைகேட்ட கைகேயிதோஷமென்று நினைத்தான்; [நசமாதுரஸ்யாஃ-நசமாதுரஸ்யாஃ] இவளுடையதோ ஷமுமன்று; இவள்வார்த்தைகேட்ட சக்ரவர்த்தி தோஷமென்று

யாதி). அப்படி மதிவாகத் தோற்ற வில்லையேயென்ன; அருளிச்செய்கிறார் (அநந்யார்ஹராயித்யாதி).

கீழ்ப்பதங்களெல்லாவற்றையும் பற்ற அருளிச்செய்கிறார் (ஸ்வரூப த்தை நோகக்கிளைல்ல ளித்யாதி).

(க) அயோத்யாகாண்டமென்று பகவத்விஷய ப்ரமாணத்திரட்டில்.

கினைத்தான்; [தோஷோநராஜ்ஞ:- தோஷோநராஜ்ஞ:] ராஜாவுகது ஏ
தோஷமுமில்லை, அவன்வார்த்தையைக்கேட்டுத் தமக்குவகுத்தவி
ஷேகத்தைப் பொகட்டுக் காட்டிலேபோனவவர்குற்றமித்தனை;
[நசராகவஸ்ய- நசராகவஸ்ய]†அவர்க்குத் தான் குற்றமென், அவ
ஆபிஷிக்தராயிருந்தால் அநுகூலவ்ருத்தி பண்ணக்கடவனாயிரு
அதுக்கல்லாத வென்பாபமே இவ்வநர்த்தத்துக்கெல்லாம் ஹே
தூதம்; [வநப்ரவேசேரகுநந்தநஸ்ய- வநப்ரவேசேரகுநந்தநஸ்ய] இ
குடி வாழப்பிறந்த செல்வப்பிள்ளை வநவாஸம் பண்ணுகைக்கு நி
த்தம் என்பாபமேயாமித்தனை.✓

✓கூனிசொன்னது கைகேயிக்குக் கேட்கவேண்டா, அவ
சொன்னது சக்ரவர்த்திக்குக் கேட்கவேண்டா, அவன் சொ
னது பெருமாளுக்குக் கேட்கவேண்டா. கூனிசொன்னது கேட்
வேண்டா தொழிகிறது - ✓அடியாட்டியாகையாலே; கைகேயி சொ
ன்னது சக்ரவர்த்திக்குக் கேட்கவேண்டா தொழிகிற தென்னை
னில்; ஸ்த்ரீ புத்ரவாத்ஸல்யத்தாலே சொன்ன வார்த்தைக
பர்த்தாவுக்குக் கேட்கவேணுமோ? சக்ரவர்த்தி சொன்னது பெ
மாளுக்குக் கேட்க வேண்டாமேவா வென்னில்; தர்மாபாஸத்தை
ஆலம்பநமாகக்கொண்டு ஸ்த்ரீபாரதந்த்ர்யத்தாலே ப்ரமித்து
சொன்னவார்த்தையைப் பெருமாளுக்குக் கேட்கவேணுமோ? இ
முடைய அந்வய வ்யதிரேகங்களில் நான்படும் பாடறிவர், தா
ராஜ்யப்ராபதரென்னுமிடமறிவர், ஆனபின்பு அவனைக்கட்டி இ
ழுவைத்து ராஜ்யத்தை யாளத் தட்டென்? அவன் சொன்ன வச
தை யநாதரிதது ராஜ்யத்தை யாண்டாராகில் தம்முடைய
திரேகத்தில் நான் முடியாதபடி ரக்ஷித்தாராகலாயிற்றதே; ஆ
யால் என்பாபமே ✓இதுக்கு நிமித்தமென்றுணிறே ஸ்ரீ பரத
வான்.✓... ... ... (க

மூ.—கல்லெடுத்துக்கன்மாரிகாத்தாயென்னும்
காமருபூங்கச்சியூரகத்தாயென்னும்
வில்லிறுத்ததுமெல்லியல்தோள்தோய்ந்தாயென்னு
வெஃகாவில்துயிலமர்ந்தவேந்தேயென்னும்
மல்லடர்த்ததுமல்லைபன்றட்டாயென்னும்
மாகீண்டகைத்தலத்தென்மைந்தாவென்னும்
சொல்லெடுத்துத்தன்கிளியைச்சொல்லேயென்று
துணைமுலைமேல்துளிசோரச்சோர்கின்றாளே. (க

பெருமாள் ஸத்யஸந்தராகையாலே - பித்ருவசந பரிபாலநம்பண்ணி
ணும், ஆகையாலே அவர்தோஷமன்று என்பாபமே யாமத்தனை யென்றபடி

பதம்.—கல்மாரி, கல்லெடுத்து, சாத்தாய்என்னும், சாமர், பூ, (நி) கச்சி, ஊரகத்தாய்என்னும், வில்லிறுத்து, மெல்லியல், தோள் தோய்ந்தாய்என்னும், (கo) வெஃகாவில், துயில்அமர்ந்த, வேந்தேஎன்னும், அன்று, மல்அடர்த்து, (கரு) மல்லைஅட்டாய்என்னும், மாகீண்ட, கைத்தலத்து, என்மைந்தாஎன்னும், தன்கிளியை, (உo) சொல்லெடுத்து, சொல்லென்று, துணைமுலைமேல், துளிசோர, சோர்கின்றாள். (உரு)

உரை—(இந்த்ரன் வர்ஷித்த) கல்வர்ஷத்தை,மலையெடுத்து,(தடுத்து) ரக்ஷித்தவனே! என்கிறாள்; ஆசைப்படத்தக்கதாய், அழகிதாயிருந்துள்ள,(நி) காஞ்சீபுரத்திலே, திருவூரகத்திலே நித்யவாஸம் பண்ணுமவனே! என்கிறாள்; (ஜநகமஹாராஜன் பலபரீக்ஷார்த்தமாக வைத்த,) வில்லிறுத்தீ, ம்ருதுஸ்வபாவையான பிராட்டியுடைய, புஜங்களோடு ஸம்ச்லேஷித்தவனே! என்கிறாள்; (கo) திருவெஃகாவிலே, கண்வளர்ந்தருளுகிற, ராஜாவானவனே! என்கிறாள்; கம்ஸன் தன்னை நலிகைக்காக மல்லரை வாசலிலே காவலாக வைத்தவன்று, அவர்கள் பலத்தைப்போக்கி, (கரு) (சாணூர முஷ்டிகர்களாகிற) மல்லர்களை நிரஸித்தவனே! என்கிறாள்; குதிரை வடிவையுடைய கேசி என்னும் அஸுரனுடையவாயைக் கிழித்துப்பொகட்ட, புஜபலத்தையுடையனாய், யுவாவானவனே! என்கிறாள்; (இப்படி பலவகையாகக் கூப்பிட்டு) தன்னுடைய கிளியை(ப் பார்த்து), (உo) (அதுக்குத் திருநாமத்தின்) முதலெழுத்தையெடுத்துக்கொடுத்து, மேலுள்ளதை நீயே சொல்லென்றுசொல்லி, ஒன்றுக்கொன்று ரூப்பானஸ்தநங்களிலே, கண்ணீர்த்துளிகள் பாயத், துவளாநின்றாள். (உரு) ... ... (கஉ)

வ்யா.—பதின்மூன்றும்பாட்டு. (கல்லெடுத்து) திருத்தாயார் "இவள், திருநாமத்தைத்தன்வாயாலே சொல்லாநின்றாள், திருநாமம் ஸாத்மிக்குந் தசைபோலேயிருந்தது" என்று பார்த்து, "இவள் வார்த்தை கேளாதே உறுவிக்கிடக்கிற கிளியை இவள்கண்முகப்டே வைத்துத் திருநாமத்தைச்சொல்லுவிக்க இவளுக்கு ஆஶ்வாஸம் பிறக்கும்" என்றுநினைத்து இவள்முன்பே கிளியைக்கொண்டுவந்துவிட்டவிடத்திலும் அது பேசாதேயிருக்க, இவள் "திருநாமத்தைச் சொல்லீர்" என்றாள்; இவள்தசையைக்கண்டு உறுவியிருக்கையாலும், "சேஷபூதரான நாம் இவள் கற்பித்தவையேயாகிலும் இவள் ஸந்நிதியில் சொல்லக்கடவோமல்லோம்" என்னும் நினைவாலும் பேசாதேயிருந்தது; "ஆசார்யன் போக்கினவையேயாகிலும் தத்ஸந்நிதியிலே சொல்லக்கடவ தல்ல" என்கிற சாஸ்த்ரார்த்தம் இவ்விடத்திலே வெளியிடப்படுகிறது. "நான் உச்சரிக்க அநந்தரம் உனக்கும் உச்சரிக்கலாமே" என்ன; அடியிலும் கற்பித்த ப்ரகார மதுவாகையாலே அதுக்கிசையத்தான் ஆதிக்ரஹணம்பண்ண அநந்தரம் சொன்னவாறே, † இது ஒருமுகத்தாலே ஸாத்மியாமையாலே தளர்ந்தாளென்கிறாள். ‡ திருநாமம் ஸாத்மிக்குந் தசையென்றும் ஸாத்

பதின்மூன்றும்பாட்டு. (ஒருமுகத்தாலே) - ஆபத்ஸகத்வம் முதலானவர்த்த முகத்தாலே.

மியாத தசையென்று முண்டோ வென்னில்; திருநாமந்தான் ஓரவஸ்த்தையில் பாவநமுமாய் ஓரவஸ்த்தையில் போக்யமுமாய் ஓரவஸ்த்தையில் ஸம்ஸாரபயநிவர்த்தகமுமாய், ஓரவஸ்த்தையில் ஸாதநமுமாய், ஓரவஸ்தையில் தாரகமுமாய், ஓரவஸ்த்தையில் நஞ்சுமாயிருக்கும். †தேஹாத்மாபிமாநிகளுக்கு அந்நம் இத்தனையு மாகாதின்றதிறே.। (ச) "ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்திः – ஆஹாரசுத்தௌளஸத்வ சுத்திः" என்கிறபடியே அந்நம் பாவநமுமா யிருக்கும், தாரகமுமாயிருக்கும், போக்யமுமாயிருக்கும், தாநாதிமுகத்தாலே புருஷார்த்தஸாதநமுமாயிருக்கும், அதிசயித்தவாறே நஞ்சுமாயிருக்குமிறே; அப்படியே, †"பரமேசஷம்ஆத்மா" என்றிருக்குமவனுக்கு, (ஏ) "பவித்ராணாம்ஹ்ருஷீகேசः பவித்ரம்பரமுச்யதே – பவித்ராணம் ஹ்ருஷீகேசः பவித்ரம்பரமுச்யதே" என்கிறபடியே ப்ரதமத்தில் பாவநமுமாயிருக்கும்; அநந்தரம் (ஈ) "புண்யானாமபிபுண்யோஸௌ- புண்யாநாமபிபுண்யோஸௌ" என்கிறபடியே உஜ்ஜீவநஸாதநமுமாயிருக்கும்; (ச)"மங்களானாஞ்சமங்களம்–மங்களாநாஞ்சமங்களம்" என்கிறபடியே ப்ராப்யமுமாயிருக்கும்; (ஞ) "யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத்விமோக்ஷமாப்நோதி – யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத்விமோக்ஷமாப்நோதி" என்கிறபடியே ஸம்ஸாரபயநிவர்த்தகமுமா யிருக்கும்; இது ருஷிகள் கோஷ்டியில்பரிமாற்றம்; ஆழ்வார்கள் கோஷ்டியிலுள்ள தொன்றுயிற்று; - திருநாமம் போக்யமென்றும், தாரகமென்றும், பாவநமென்றும், நஞ்சென்றும் சொல்லுகிற விது. (ஸ) "அச்சுதாவமரோரே ஆயர்தங்கொழுந்தே" என்று திருநாமம்போக்யமா யிருக்கிறபடியைச் சொன்னார்கள்; (எ) "நின்னைமங் கற்றவாவலிப்பு" என்று பாவநமென்னுமிடம் சொன்னார்கள்; (அ) "கோவிந்தன் குணம்பாடி - ஆவிகாத்திருப்பேன்" என்று - தாரகமென்னுமிடம்சொன்னார்கள்; (கூ) "கண்ணன் நாமமே குழறிக்கொள்ளீர்" என்றும், (கo) "பிழைப்பில் பெரும்பெயர்" என்றும் - நஞ்சென்னுமிடத்தைச்சொன்னார்கள்.

(கல்லெடுத்தித்யாதி) தான் ஆபந்நையா யிருக்கையாலே ஆபந்நிவர்த்தகமான திருநாமங்களை யெடுத்தாயிற்று அவற்றைச் சொல்லச்சொல்லுகிறது. (கல்லித்யாதி) ரக்ஷகனைவைத்த இந்த்ரன் பக்

ஒன்றுக்கே அநேகாவஸ்த்தை யுண்டாகக்கூடுமோ வென்ன; அருளிச்செயல்கிறார் (தேஹாத்மாபிமாநிகளுக்கித்யாதி). பரமேசஷம்-ஈச்வரசேஷம்.

(க) (ங)

(ச) ஸஹஸ்ர-உபோ.
(ஞ)
(ஸ) தி-மா-உ.

(எ) தி-மா-க.
(அ) நா-தி-அ-ங.
(கூ) தி-வாய்.
(கo) உ-திரு-ஞo.

தகனைக, ரக்ஷ்யவர்க்கம் அவன்கையிலே பாத்யமாய்நிற்க, கிருபாதி கரக்ஷகன் ரக்ஷித்தபடியைச்சொல்லுகிறது. திருவாய்ப்பாடியிலுள் ளார் வர்ஷார்த்தமாக இந்த்ரனை ஆராதிக்கப்புக, க்ருஷ்ணன் அத் தை நிஷேதித்து, "நமக்கு ரக்ஷகம் காடும் மலையுமாயிற்று, அவ ற்றை யாராதிக்க வமையும்" என்றுசொல்ல, அவர்களும் அப் படியே மலையை யாராதிக்க, மலத்தெய்வமா யிருந்து அத்தை யழுது செய்தாணையிற்று.

தன்னபிமாநதத்தில் கிடந்தவர்கள் தேவதாந்த்ரபஜநம்பண்ணு கையாகிறவிது - ஸ்வஸ்த்ரீயைப் பிறர்க்குக் கொடுத்தாற்போலே யிருந்ததாயிற்று ஈஸ்வரனுக்கு. இவ்வளவிலே "'நமக்கு' என்றுநிலே நித்ததனை 'அபிமர்நோபஹதம்' என்று பாராதே அழுது செய்யப் பெறுவதே!" என்று அலைகளை வாங்கிவரப்ராப்தமாயிருக்க, "க்ரு ஷ்ணனையண்டைகொண்டு நமமுடைய யாகபங்கதைப் பண்ணினர் கள் இடையர்" என்று குபிதனாய்ஸம்வர்த்தகாகணங்களை யழைத்து, "கல்வர்ஷமாகச் சொரிந்து திருவாய்ப்பாடியை யழித்துப்போடுங் கள்" என்ன; திருவாய்ப் பாடியிலுள்ளாரும், (க) "ஸ்ரீமந்நாராயணஸ்ய பரம-கோகோபீஜநஸங்குலமதீவார்த்தம்" என்கிறபடியே ஆபந்நராக; அத்தசையிலே, "மலையை யாராதித்தோம், க்ருஷ்ணன் ரக்ஷித்தான்" என்னவொண்ணுதென்று பார்த்து, இவர்கள ஆரா திக்க மலைதன்னையேயெடுத்து ரக்ஷித்தபடி.

(கல்லெடுத்து) அவனெடுத்தது(உ) *சோலைசூழ்குன்றுயிருக்க, (கல்லெடுத்து) என்று - ஒருசிலாமாத்ரத்தை யெடுத்தாற்போலே ஓசழக்காகச்சொல்லுகிறாள், ஸ்ரீ கோவர்த்தநத்தை யெடுத்துபோ தை அநாயாஸத்தைக் கண்டிருந்தவளாகையாலே. இந்தசக்தியிறே இவளுடைய ஹ்ருதயத்தில் கிடப்பது. †"கிட்டுவதும் அநுபவிப்ப தும் பெறுவதும் ஈஸ்வரசக்தியாலே" என்றிருக்கு மவளிறே. † அசக்தாதிகாரமிது, சக்தாதிகாரம் ஸாதநாந்தரங்களென்கிற வார்த்தைகள் நம்மாசார்யர்கள்கோஷ்டியிலே புகுரக்கடவ தன்றி யேயிறேயிருப்பது. "சக்தரோடு அசக்தரோடு வாசியில்லை ஈஸ்வர சக்தியைக்கொண்டு தலையெடுக்கைக்கு" என்றிருக்கும் கோஷ்டி யிறே. (ங) "ஶ்ரீமஹாபுவஹாநூமத்ஃ-சீதாபவஹாநூமதஃ" என்கிறசக்தி

---

§ (வாங்க)எழுத்துவாங்க; இந்த்ரன் தன்னை யெழுதிக் கொடுக்கப்ரா ப்தமாயிருக்க. அவன்சக்தி ஹ்ருதயத்திலே கிடக்கவேண்டுவா னென்னென் ன்ன; அருளிச்செய்கிறார் (கிட்டுவது மித்யாதி). அவன்சக்தியை யநுஸந்தி க்கை அசக்தர்கதோ, சக்தர்க்கு வேண்டாதோவென்ன; அருளிச்செய்கிறார் (அசக்தாதிகார மித்யாதி).

(க) வி-பு-நி-கக-கங. (உ) க-திரு-சுக. (ங) ரா-ஸு-நிங-உக.
§ இங்கு வ்யாக்யாநாரும் பதபங்க்திகளுக்கு ஆநரூப்யமில்லை.

ஸ்வாஸ்ரயத்திலேகிடக்க, (க) "நராவணஸஹஸ்ரஸம்மேயுத்³தே⁴ப்ரதிபூ⁴
பூ⁴வேத் – நராவணஸஹஸ்ரம்மே யுதே⁴ப்ரதிபலம்பவேத்" என்க
சக்தியுடையவன்†ஸஹகாரியாகத், தனக்கோராற்றுமை அதிசயித்தி
க்க, (உ) "த த்தஸ்யஸத்³ருʼஶம்பூ⁴வேத் -தத்தஸ்யஸத்ருʼஶம்பவேத்" என்
றே-ப்ரதமாசார்யையானபிராட்டியிருந்தது. "கன்மாரியாகையாலே
கல்லையெடுத்து ரக்ஷித்தான், நீர்மாரியாகில் கடலையெடுத்து ரக்ஷி
குங்காணும்" என்று பட்டரருளிச்செய்வர். இதனால் - இன்ன
தைக்கொண்டு இன்னகார்யஞ் செய்யக்கடவோமென்னுமநி
யில்லை; ஸர்வசக்தனென்கை. பிறரால்வந்த ஆபத்திலோ ரக்ஷி
லாவது? உன்னல்வந்தவாபத்தில் ரக்ஷிக்கலாகாதோ? கல்வர்ஷத்
லகப்பட்டாரையோ ரக்ஷிக்கலாவது? (கூ) "பஹூநாஸ ந்ததமுத்
வர்ஷே-பஹூநாஸந்தததுர்தி³கவர்ஷிணி" என்கிற துர்தினவர்ஷத்திலகப்
ட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? ஒருவூராரகப்பட நோவுபட்டாரை
ரக்ஷிக்கலாவது? அவ்வூராகப்பட்ட நோவை ஒருததிபட்டால் ரக்ஷி
க்கலாகாதோ? என்னுடைய ரக்ஷணத்துக்கும் மலையையெடுக்கவே
ணுமோ? மலையையெடுத்த தோளைக் காட்டவமையாதோ?

(காமருபூமித்யாதி) அக்காலத்தில் பிற்பட்டார்க்கு முன்னே
ஸர்வஸ்வதாநம் பண்ணுவைக்கன்றே திருவூரகத்திலேவந்து நி
றருளிற்று. திருவூரகததில் த்ரைவிக்ரமாபதாநவேஷத்தோடே வ
துநிறக க்ருஷ்ணன்வந்து நின்றுகப் பேசுவானென்னென்னில்
வரையாதே எல்லாரையும் தீணடுகையும் தன்பேறுகக் காய்ந்
செய்கையும் இரண்டவதாரத்துக்கும் நிரூபகமா யிருக்கையாலே
தத்ஸாம்யத்தைப்பற்ற அபிநிவேசமாகப்பேசாநிற்பர்கள். (காமருபூ
கச்சி) ஆதரிக்கப்படுவதாய் தர்சநீயமாயிருக்கை. போக்யங்களி
லும போகோபகரணங்களாலும் ஸம்ருத்தமான காஞ்சீபுரமி
கை. திருப்பதிகளால்ஸம்ருத்தமாயிருக்கையாலே போக்யங்களா
ஸம்ருத்தமான தேசமென்கிறது. படைவீடாகையாலே போகோ
கரணங்களாலே ஸம்ருத்தமான தேசமென்கிறது; பரமபதத்துக்கு
ஏற்றம் இதுவேயிறே விழுகாக்கு ஸுலபமான திருவடிகள
ஆற்றுமையுடையவெனக்கு துர்லபமாவதே! என்கிறாள்.

அந்த தூளிதாநந்தான் ப்ராதேஶிகமாய்த்தான் ஆறியிருக்கிறே
னே; அக்காலதத்தில் பிற்பட்டார்க்கு முதலவவந்து நிறக அக்காலத்
திற்குப பிற்பட்டேனென்றுறியிருக்கிறேனே; ஒன்றில் அவதா
ங்களைச் சேர அநுபவிகிறிலர், ஒன்றில் திருபபதிகளைச சேர
அநுபவிக்கிறிலர்; கலசியாயிற்று அநுபவிக்கிறது.

(ஸஹகாரி) திருவடி.

(க) ரா ஸ-சஉ-நகி. (உ) ரா-ஸ-நெ-சுஉ. (கூ) ஸ்தோ-ர-சகூ.

திருநெடுந்தாண்டகம்-கஉ-பா-கல்லெடுத்து வ்யாக்யானம். ககஉ

அதுக்கு ஹேதுவென்னெனில்; பிடிதோறும் நெய்வார்ப்பாரைப்போலே திருப்பதிகளை யொழியத் தமக்குச் செல்லாதபடியாலே. திருப்பதிகளினுடைய அடிப்பாடு வேண்டுகைபாலேயிறே அவதாரத்தி லிழிகிறது. அல்லாத ஆழ்வார்களுக்கும் இவர்க்கு மூண்டானவாசி யிதுவிறே. அவர்கள் மேன்மையை யநுபவிக்கும் போது பராவஸ்த்தையைப் பேசுவர்கள்; நீர்மையை யநுபவிக்கும் போது அவதாரங்களைப் பேசுவர்கள்; அந்நீர்மையை ஸாக்ஷாத்கரிக்கைக்காகத திருப்பதிகளிலே யிழிவர்கள்; இவர், மேன்மையை யநுபவிபப்தும் திருப்பதிகளிலே, நீர்மையை யநுபவிப்பதும் திருப்பதிகளிலே, அத்தை ஸாக்ஷாத்கரிப்பதும் திருப்பதிகளிலே.

(வில்லிறுத்தித்யாதி) பிராட்டியை லபிக்கைககு இடைச்சுவரான வில்லை முறித்து, அவ்வாண்பிள்ளைத் தனத்தைக்காட்டி ஸ்த்ரீத்வத்தால் வந்தவபிமாநதத்தையும்போக்கி, ப்ரக்ருத்யா ப்ருதுவாயிருந்துள்ளபிராட்டியோடேஸமஸ்லேஷித்தவனே! ஸ்ரீ ஜநகசக்ரவர்த்தி "இவ்வில்லை முறித்தார்க்கு இவளைக்கொடுக்கக்கடவோம்" என்றுப்ரதிஜ்ஞைபண்ணுகையாலே, வில்லையெடுத்து நாணியேற்றி வலிக்கப்புக்க வளவிலே வில்லுமுறிந்தது, அவ்வளவிலே பொற்கிண்டியைக்கொண்டுவந்து உதகம்பண்ணப்புக, "ராஜகுமாரர்களாலே வீரவாசி கொண்டாடவந்தோமித்தனையொழிய விவாஹம் தாழ்ந்துப் பெண்தேடிவந்தோமோ நாங்கள், அத்தை வஸிஷ்டாதிகளையும் ஐயரையுங் கேட்பதென்ன; வில்லைமுறித்த ஆண்பிள்ளைத் தனத்தையும் வார்த்தைசொன்ன சீர்மையையுங்கண்டு தனியளாளுள் பிராட்டி, அவ்வில் முறித்த ஆயாஸத்தால்வந்த ஸ்ரமஹரமாக அவள் தோளிலே முழுகினையிற்று.

(தோள்தோய்ந்தாயென்னும்) விபுதத்வம் ஏகாவயவத்திலே யட்ங்கினபடி. அல்லாத அவயவங்களும் ஆத்மகுணங்களும் தேஹகுணங்களும் குமரிருந்துபோமிதனை. இத்தால் நித்யாநபாயினியான பிராட்டியைபபிரிந்தாலும் உதகம் பண்ணுவாரும் சேர்ப்பாரும் வேண்டியிருக்கிறபடி. சேதநனுக்கும் இவளோபாதி அந்ந்யார்ஹத்வமஸ்வரூபதத்திலே யுண்டானாலும் ஆசார்யஸமாஸ்ரயணமும் புருஷகாராபேக்ஷையுமுண்டாயிறே ஈஸ்வர விஷயீகாரத்துக்கு இருப்பது. உன்னைப்பிரிந்து தனியிருப்பாருடைய ஆபத்தைப் போக்கின நீ என்தனிமையால்வந்த ஆபத்தைப் போக்காதொழிவதே!

---

§ (அடிப்பாடு) பிராட்டி யணைகவென்று பூரிப்பது.

§ இங்கு பங்கதியிலகூடாங்கள் ஸ்க்கலிதங்களாயிருகலாம்.

(வெஃகாவில் துயிலித்யாதி) பிராட்டியைப் பாணிக்ரஹணம் பண்ணிவந்துகிடந்ததேசம் திருவெஃகாவாயிற்று.

(வேந்தேயென்னும்) ஒருராஜகுமாரன் வந்து கிடக்கிறானென்று ப்ரத்யபிஜ்ஞை பண்ணலாம்படியாயிற்றுத் திருவெஃகாவிலே நாயனார் கண்வளர்ந்தருளும்படி. இருவரும் சேர்ந்த சேர்த்தியிலே யநுபவிக்க வாசைப்பட்டு அதுகிடையாதே நோவுபடுகிற வென்னும் † அச்சேர்த்திக்குமென்ன ஸங்கதியுண்டி.

(மல்லடார்த்தித்யாதி) சாணூர முஷ்டிகர்களை நிரஸிக்கிறபோது ப்ரதமத்திலே அவர்கள் மிடுகையழிதது‌ப்பின்னையாயிற்று அவர்களை நிரஸித்தது. (க) "మృగమధ్యేయథాసింహా ×ర్వ్వలీలావతాకినా ம்ருகமத்யேயதாஸிம்ஹௌகர்வலீலாவலெளகிநெள" என்கிறபடியே-குவலயாபீடத்தை நிரஸிதது அதினுடைய கொம்பை இருவருடைய கையிலே பிடித்துக்கொண்டு சத்ருபக்ஷமென்று மதியாதே குதூஹலோத்ஸவும் தாங்களுமாய்ப பெரியசெருக்கோடே ரங்கமத்யத்திலே புகுந்தபோது ஒருமான் குழாத்தின் நடுவே இரண்டுஸிம்ஹம் புக்கதற்போலே யிருக்கையாலே தர்சித்தபோதே மிடுக்குபோயிற்று பின்னை ஆஸ்ரயத்தை யழித்துவிட்டானத்தனையாயிற்று. † அந்நவென்றியே, (மல்லடார்த்து) வரும் மல்லரை நிரஸிததபடியைச் சொல்லுகிறதென்னவுமாம். திருத்தோள்களின் மிடுக்கு "நான்குமரிருந்து போமித்தனையோ, என் தினவுதீர விஷயங்காட்டவேணும்" என்ன நெருக்கி விஷயங் காட்டிக்கொடுத்தபடி.

(அன்றிதயாதி) அன்றுமின்றுமபோலேகாணும் ஆபத்துவருகிறது. ஸ்ரீ வஸுதேவரும் தேவகிப்பிராட்டியும், "பிறந்தவன்று கண்டுவிட்டோம், ஸமாப்திவேளையிலேயாகிலும் பிள்ளைமுகத்திலே விழிக்கவல்லோமே" என்று ஆபந்நராய்க்கிடந்த அவர்களாபத்துத் தவிர்ப்பதற்கு நிதர்சநமா யிருக்கையாலே (அன்று) என்கிறான். இவர்கள் முகத்திலே சென்று விழித்துப் பின்னை விரோதிநிரஸநம் பண்ணப்ராப்தமா யிருக்க அது செய்யாதொழிந்தது, "விரோதி கிடக்கச்செய்தே சென்று விழிக்கிறவிதுக்கு ப்ரயோஜநமென்?" என்னும் நினைவாலே. விரோதி நிவ்ருத்தி பூர்வகமாயிறே ப்ராப்தி விதியிருபபது. (மல்லரையன்றட்டாயென்னும்) மாதாபிதாக்களுக்கு வந்த ஆபத்தோ போக்கலாவது, ப்ரணயிநிக்கு வந்த ஆபத்

(அச்சேர்த்திக்கும்) என்துஃகத்தைப் போக்கிலுலன்றே அச்சேர்த்தி சேர்த்தியாவது-ஸுகமாவது; அதுஸுகமன்றென்றபடி.

மல்லடார்த்து-திருத்தோளில் மிடுக்கு விஷயத்தைக்காட்டென்று அடுக்க வரும்மல்லனை எதிர்த்து; - வருகிறமல்லனை யட்டானென்று இரண்டாம் தாத்பர்யம்.

(க) வி - பு - தி - உ0 - சரு.

திருநெடுந்தாண்டகம்-கந-பா-கல்லெடுத்து வ்யாக்யானம். ககநி

துப்போக்கலாகாதோ? மஹாபாபிகளான சாணூர முஷ்டிகர்கள் பெற்றதோள், அத்தோளை யொழியச் செல்லாத வெனக்கு அரிதா வதே! என்கிறாள். நான் இவ்வாற்றாமையை விட்டு ப்ரதிகூலவேஷ த்தைக்கொண்டிவர்தேனகில் தோளையநுபவிக்கலாமே! என்கிறாள்.

(மாகீண்ட ஷித்யாதி) பஞ்சலக்ஷம்குடியிற் பெண்களுக்கும் தன்னை யநுபவிக்க வருகிற வழியிலுண்டான வன்னியமறுத்துக் கொடுத்தபடியைச் சொல்லுகிறது கம்ஸப்ரேரிதனாய்வந்த கேசி இவனுடையபருவத்தையும்ஸௌகுமார்யத்தையுங்கண்டு, "இவன் ஒருபொருளா? எடுத்துவிழுங்குகிறோம்" என்றுவாயைத்திறந்து கொண்டுவர, சிறுபிள்ளைகள் த்வாரங்கண்டவிடத்திலே கையை நீட்டக்கடவர்களாயிறே யிருப்பது, அத்தாலேகையைநீட்டினான்; ரக்ஷகனுடைய கையாலேயாலே ரக்ஷணதர்மம் பெற்றவாறே வளர்ந்துகொடுத்தது; வெள்ளரிப்பழம் விரிந்தாற்போலே விரிந்து கிடந்தா னித்தனையென்கை. (என்மைந்தாவென்னும்) திருவாய்ப்பாடியிற் பெண்கள் வசீகரித்த பருவத்தைக்காட்டி என்னை அநந்யார்ஹையாக்கினவனே! என்னும். இப்படிக்கு ஆபத்ஸகமான திருநாமங்களை ஆதிக்ரஹணம்பண்ணி.

(சொல்லெடுத்து) சப்தோச்சாரணம் மலையெடுத்தாற்போலே யிருக்கிறது காணும் இவளுக்கு. †அவன் மலையை யெடுக்கிறபோது அவனுடைய சக்தியைகினைத்து, (கலலெடுத்து) என்றாள்; தன்னள விலே வந்தவாறே வாய்விடுகைக்கும் சக்தியறறிருந்தபடி. (தன்கிளி யை) தான் விரும்பிவளர்த்தகிளியை. (க) "பாவைபேணாள்" என்று அது போக்யமாய்த்தோற்றினவாறே பாவையை யநாதரித்தாள்; இதுக்குத் திருநாமஸ்பர்சமுண்டாகையாலே யாதரிக்கிறாள். பரிக்ர ஹங்களில் வந்தால் ஸ்வரூபேண த்யாஜ்யமுமில்லை, ஸ்வரூபேண உபாதேயமு மில்லையிறே. ப்ரதிகூலமானபோது ஸர்வமும் த்யாஜ் யமாகக்கடவது, † அநுகூலமானபோது ஸர்வமு முத்தேச்யமாகக் கடவது

(சொல்லேயென்று) திருநாமத்தைச் சொல்லீரென்று ஆதிக்ர ஹணம் பண்ணிக்கொடுத்தாள், அநந்தரம் அது சொல்லத தொடங் கிற்று. (துணைமுலையித்யாதி) கேட்பாரைப் பெற்றதில்லையென்கி றாள். ஸ்த்ரீத்வ †பாவனை யொழிய ஸ்மஸ்ருஷியோகமும்பிறந்து ஸ்த

சொல்லெடுக்கை ஆயாஸமாகில், (கல்லெடுத்து) என்று அநாயாஸமாகச் சொல்லும்படி யென்னென்ன; அருளிச்செய்கிறார் (அவன்மலையித்யாதி). அநுகூலம்-பகவத்ஸ்பர்சம்.

பாவனையொழிய - பாவிக்கைமாத்ரமன்றிக்கே, ஸ்த்ரீத்வம் முற்றிற்றே வென்றபடி.

(க) ககக.

நோத்பேதமும் பிறந்தபோதாவென்னில்; ஸ்மஸ்ரு ஸ்வதந்தரலக்ஷணம், ஸ்தநம் பரதந்த்ரலக்ஷணம், அந்தஸ்வாதந்த்ர்ய நிவ்ருத்தியையும் பாரதந்தர்யத்தையும் சொல்லுகிறது. ஸ்த்ரீகளுக்கு போகோபகரணமிறைமுலை. சேஷபூதனுக்கு, முலையென்கிற வித்தால் - பக்தியை நினைக்கிறது. இவனுக்கும் போகோபகரணம் பக்தி; அவனுக்கும் போகோபகரணம் பக்தி; (க) * ஜ்ஞாநிநஃ- பக்திக்ரீதனிறே.

(துணைமுலை) போக்தாவுக்கு போகோபகரணமிறே துணைமுலையாவது. அங்ஙனன்றிகே, ஒருமுலைக்கு ஒருமுலை துணையாமித்தனையொழியவேவெறுப்பின்றிக்கேயிருக்கை †அவனுடைய திருவடிகளைப் போலேயாயிற்று இவளுடையமுலையுமிருப்பது. †அல்லாத ஆழ்வார்களைப்போலன்றியே ஸுகுமாரராயிறே திருமங்கையாழ்வாரிருப்பது. மலையாளர் ஒருமாஸத்துக்கு ஒருகாலே யுண்ணவும் வல்லர்களாய் ஒருமாஸம்பட்டினிவிடவும் வல்லர்களாயிருக்குமாபோலே, ஸம்ஸ்லேஷதசையில் நெடுநாள் தரித்திருந்து அநுபவிக்கவும் வல்லர்களாய் விஸ்லேஷத்தில் நெடுநாள் தரிக்கவும் வல்லர்களாயிறே மற்றையாழ்வார்களிருப்பது; ஸம்ஸ்லேஷிக்கவும் மாட்டாதே விஸ்லேஷிக்கவும்மாட்டாதபடியாயாயிற்று இவருடைய ஸௌகுமார்யமிருப்பது. இவர் உண்ணவும்மாட்டார், பட்டினிவிடவும்மாட்டார். (உ)"நும்மடியா ரெல்லாரோடுமொக்கவெண்ணி யிருத்தீரடியேனை" என்னக்கடவதிறே. (துணைமுலைமேல் துளிசோர) ஸ்பர்சேந்த்ரியமும் த்ருஷ்டியும் ஸ்வபோகங்களை யிழந்து தன்னிலே கட்டிக்கொண்டுகிடந்து கதறுகிறபோலே யிருக்கிறபடி. கண்ணீர் அல்லாத ப்ரதேசங்களிலே விழாதே முலையிலே விழுகையாலே - கண்ணும் முலையும் தன்னிலே கட்டிக்கொண்டுகிடந்து கதறுகிறுப்போலேயிருக்கிறதாயிற்று. (சோர்கின்றுளே) போகோபகரணமான ஜ்ஞாந பக்திகளழிகையாலே தானும்சோரார்கின்றுள். "முன்பு திருநாமத்தைச்சொல்லுகையாலே ஆஸ்வாஸம் பிறந்தது; ஆகையாலே திருநாமம் ஆஸ்வாஸஹேதுவாமோ" என்று பார்த்து அதைச்சொல்லுகை தொடங்கினாள்; அதுக்குள்ளீடான வர்த்தமானத்தை யநுஸந்தித்து மோஹங் கதையாளள்; "ஆபத்ஸகனனவன் ஆபந்நயாவெனக்கு உதவாதொழிவதே!" என்று மோஹங் கதையென்றுமென்னுகை. ... ... (க)

துணைமுலை-போக்தாவுக்குத் துணையாதல்; ஒன்றுக்கொன்று துணையாதல். ஒப்பில்லாமைக்குத் திருவடிகள் த்ருஷ்டாந்தம். வேறுபோல்லையென்பானென், மற்றை யாழ்வார்களில்லையோவென்ன; அருளிச்செய்கிறார் (அவர்களிருக்கிறார்களாதலால் வாழ்வார்களித்யாதி). ... ... (க)

(*) (உ) தி - மொ - சு - கூ - சு.

மூ.—முளைக்கதிரைக்குறுங்குடியுள்முகிலைமூவா
மூவுலகுங்கடந்தபபால்முதலாய்நின்ற
அளப்பரியவாரமுதையரங்கமேய
வந்தணனையந்தணர்தஞ்சிந்தையானை
விளக்கொளியைமரதகத்தைத்திருத்தண்காவில்
வெஃகாவில்திருமாலைப்பாடக்கேட்டு
வளர்த்ததனல்பயன்பெற்றேன்வருகவென்று
மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினளே. (கச)

பதம்.—முளைகதிரை, குறுங்குடியுள்முகிலை, மூவாமூவுலகுங்கடந்து, அப்பால், முதலாய், (கூ) நின்ற, அளப்பரிய, ஆரமுதை, அரங்கம், மேய,(கo) அந்தணனை, அந்தணர் தம்சிந்தையானை, விளக்கொளியை, திருத்தண்காவில், மரதகத்தை, (கஞ) வெஃகாவில், திருமாலை, பாட, கேட்டு, வளர்த்ததனல் பயன்பெற்றேன், (உo) வருக என்று, மடக்கிளியை, கைகூப்பி, வணங்கினள். (உச)

க்கையுமிறே. உங்களுக்கு அந்தபோகஸ்த்தாநத்திலிருப்பு போகமாவது என்னையும் போகஸ்த்தாநத்திலே யிருத்தினலன்றோவென்கை. (மலர்ந்தபோதைத் தேனதனைவாய்மடித்து) அபிநவமாய் அதிரஸமாயிருந்துள்ளதேனைப் பாநம்பண்ணி. கழியவலர்ந்தால் பர்யுஷித மாய்த் தேன் அல்பமுமாய்ப் பழசுமாயிருக்கும்; கடிமொட்டாயிருந்தால் தேன் உத்பந்நமாகிறவளவாகையாலே அல்பமுமாய், வழிய வலர்த்துகையாலே ஸாரஸ்யமுங்குறைந்திருக்கும்; ஆகையாலே அலருகிறபோதைத் தேனென்கை. காற்றுலே அலரக்கடவ புஷ்பம் இலை செல்லும்போதாக வலருமோ வென்னில்; முன்பு தொட்டாரோடே தோஷமாம்படி பக்வமாயிருக்கையாலே இவற்றின் சிறகின்காற்றுலும் உச்வாஸத்தாலும் மலருமென்கை. (க) "பூவிரிய மதுநுகரும்" என்னக்கடவதிறே. செவ்வியறியாதே பொகட்டுப் போனவனைப்போலேயன்றியே நீங்கள் செவ்வியறிந்து அநுபவிக்கப் பெற்றேனென்கை. என்னையுஞ் செவ்வியழியாதே அவனேடே சோத்தபோதன்றோ நீங்கள் செவ்வியறிந் தநுபவித்திகோளாவது. (வாய்மடித்து) பார்த்ருபார்யைகள் ஒருகலத்திலே உண்பானைப்போலே அத்தேனை வாயிலேகொண்டி. அந்யோந்யம்வாயிலே கொடாகிற்கை; அந்யோந்யம்போகத்துக்கு வர்த்தகமாயிறே தேனிருப்பது. என்னையும் அவனேடே சேர்த்து, (உ) "இதம்மேத்யமிதம்ஸ்வாது" என்னும்படி பண்ணவேண்டாவோவென்கை.

(உன்பெடையும் நீயும்) உனக்கு பவ்யமானபெடையும் அதுக்கு பவ்யமான நீயும். உன் (ஞ) சந்தத்தை யநுவர்த்திக்கும் பெடையும் அதின் (ஞ)சந்தத்தை யநுவர்த்திக்கும் நீயும். அவனைப்போலேசந்தத்தை யறியாதொழிகையன்றியே நீங்கள் சந்தாநுவர்த்திகளாய்ப் பரிமாறப்பெற்றதே! (உன்பெடையும் நீயும்) சேரவிருப்பார் பிரிந்திருப்பார் கார்யஞ்செய்யவேண்டாவோ? நீங்களும் †என்னைப்போலே பிரிந்திருந்து உங்களைச் சேரவிடவேண்டாதே போரப்பெற்றதே! என்கிறாள். மஹாராஜர் ராஜ்யதாரங்களை யிழந்திருக்கையாலே அத்தைச் சேரவிட்டுக் கார்யங்கொள்ளவேண்டிற்றிறே.

(பூமருவி) அக்நியிலே அணைவானைப்போலே இதென்னஸாஹஸமென்கிறாள். (ஈ) * மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாயிறே தனக்கிருப்பது. அக்நிஸ்தம்பநமூடையார்க்குச் செய்யலாமிறே. அக்நி

(உன்பெடையும் நீயும்) என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னைப்போலேயித்யாதி).

(க) தி - மொ - ரு - கூ - க. (ஈ) தி - வாய் - கூ - க - ச.
(உ) ரா - அயோ - கூசு - உ.

திருநெடுந்தாண்டகம்-உசு-பா-தேமருவு வ்யாக்யாநம். உஉள

ஸ்தம்பநம்மாவது - மிதுநமாயிருக்கையிறே. படிக்கைபொருந்தாதே தரைக்கிடைகிடக்கிற வென்காரியஞ்செய்தாலன்றோ உங்களுக்குப் படிக்கைபொருந்திற்றுவது. "ஸ்ரமஹரமானசோலை போகஸ்தாநமாகவும், மதுபோக்யமாகவும், பூபடிக்கையாகவும், தம்பதிகள்சேரவிருக்கவும்பெறுவதாய் இதொரு ஆஸ்சர்யமிருந்தபடி யென்!" என்றாள். (இனிதமர்ந்து) இனிதாகவமர்ந்து; ஸுகரூபமாக ஸம்ஸ்லேஷித்து. துஃகரூபமான கலஹியிறே தன்னது. ஸம்ஸ்லேஷாநந்தரம் விஸ்லேஷிக்கையாலே, (க) "இது நமக்கோர் புலவிதானே" என்றுரைக்கிறே. உங்களுக்கு அது ஸுகரூபமாவது என் துஃகத்தைப்போக்கினலன்றோ?

(பொறியிலார்ந்த) பொறியென்று - புள்ளி. புள்ளிமிக்க. ஸம்ஸ்லேஷத்தால் வடிவிற்பிறந்தபுகரைச்சொல்லுகிறது. (உ) "யுவகுமாரः-யுவாகுமாரः" (ங) "யுவதிஶ்சகுமாரிணீ - யுவதிஶ்சகுமாரிணீ" என்கிற பருவத்தையுடைத்தாயிருக்கை. உபவாஸக்ருசையாய்(ச)"பூஷணார்ஹாநஶோபதே-பூஷணார்ஹாநமோபதே"என்னும்படியிருக்கிற வெனக்கு அழகையுண்டாக்கினலன்றோ உங்களுக்கு அழகாவது. (அறுகாலசிறுவண்டே) "த்விபாத்தாயிருத்தல், சதுஷ்பாத்தாயிருத்தல் செய்கையன்றியே, கமநஸாதநமான கால்கள் ஆறுண்டாகப் பெற்றேனென்கிறாள்" என்று பூர்வர்கள் நிர்வஹம். "வண்டுக்கு கமநஸாதநம் சிறகாகையாலும், மேலே, (தொழுதேன்) என்கையாலும், என்தலையிலே வைக்கைக்கு ஆறுகாலுண்டாகப் பெற்றேனென்கிறாள்" என்று பட்டரருளிச்செய்வர். (சிறுவண்டே) ஏற்கவே சிறியையாய்; திருவடியைப்போலே கார்யகாலத்திலே சிறுகவேண்டாவே யுனக்கு. (வண்டே) திருவடியைப்போலே ஆராய்ச்சிப்படவேண்டாதபடி வஸ்யத்தேயாதலை, தோளில் மாலையிலே யாதலிருந்து வார்த்தைசொலலும்படியான ஜந்மமன்றோ உன்னது. அந்யோந்ய ஸம்ஸ்லேஷ ஸுகத்தாலே மதிகெட்டுக்கிடக்கிறவற்றின் செவியிலே ஆர்த்ததத்வநிபட்டவாறே அக்நிகணங்களைத் தூவிணற்போலே அவைதுணுக்கென்று எட்டிப்பார்த்தன. (தொழுதேனுன்னை) உன்காலிலே, தொழுதேன் - விழுந்தேன். கடகர்போலேகாணும் ஸ்துத்யரும், நமஸ்கார்யரும். (உன்னை) அவனைத்தொழுகிறேனலலேன், அவன் பொகட்டபோன தசையிலும் அறிதல் பிணைக்கவிருக்கிற வுன்னைத்தொழுதேன். அவனுமுண்டாய் காணு

(க) உங.
(உ)
(ங)
(ச) ரா - ஸு - கஷ - உசு.

மூண்டாயிருக்கப் பிரிந்து க்லேசப்படாநின்றேன், சேரவிட்ட நீயன்றே ஸ்துதிக்கப்படுவாயும் நமஸ்கரிக்கப்படுவாயும். இவருடைய (க) * அத்ரபரத்ரசாபி-அத்ரபாத்ரசாபி இருக்கிறபடி.

என்னைத் தொழுகிறதென், கார்யத்தைச் சொல்லலாகாதோ வென்னச், சொல்லுகிறாள், (அமரர்கோமான்) * அயர்வறுமமரர்க ளதிபதிக்குச் சென்று அறிவியுங்கோள். அவனை எங்களால் கிட்ட லாமோவென்ன; (ஆமருவினைமேய்த்த) அம்மேன்மை கிடக்கச் செய்தேகாண் பசுக்களோடே பொருந்திப் பசுக்களைரகூஷிப்பது. நித்ய ஸூரிகளுக்குத் தன்னை யொழியச்செல்லாதாற்போலேகாண் பசுக்களையொழியத் தனக்குச் செல்லாதே குடியிருக்கும்படியும். அவர்களுக்குத் தன்னையொழியச்செல்லாதபடியாலே முகங்காட்டுகிறானித்தனை; பசுக்களோடேகாண் அவனுக்குப் பொருத்தம்.

அது பின்னை யொருகாலத்திலன்றே வென்ன; (அணியழுந்தூர் நின்றானுக்கு) அக்காலத்தில் பசுக்களை ரகூஷித்தாறபோலே அக்காலதத்துகுப் பிற்பாடராய்ப் பசுஸமரா யிருப்பாரையும் ரகூஷிக்கைக்காகத் திருவழுந்தூரிலே நின்றான், அவனுக்கறிவியுங்கோள். அவன் பிரிகிறபோது, (உ) "புனலரங்கமூர்" என்று சொல்லிக் கோயிலிலே போயிருக்கத, திருவழுந்தூரிலே தூதுவிடுகை, (ங) "కృష్ణపాలపై కటించాలయతి-கார்ணஸ்ப்ருஷ்டேகடிம்சாலயதி' என்கிறபடியேஅஸங்கதமன்றே வென்னில்; அவனும் சேதநனுகையாலேன்னுற்றுமையவனுக்கு முண்டாயிருக்கும், ஒருகார்யப்பாட்டாலே பிரிந்தானித்தனை, முடியப்போகமாட்டான், திருவழுந்தூரிலே பிற்காலித்து நிற்கக்கூடும், அங்கே சென்றறிவியுங்கோளென்கிறாள். அங்ஙனன்றியே, கோயில் போகஸ்தாநமாகையாலே என்னை யொழிய அங்கு தரிக்கமாட்டான், அத்தாலே எதிரே திருவழுந்தூராளவிலே வரும், அங்கே செல்லுங்கோளென்கிறாளாகவுமாம்.

(நின்றானுக்கு) அவ்வருகுபோகமாட்டாமையாலே ஸ்தாவரப்ரதிஷ்டைபோலே நின்றானென்னுதல்; கோயில்நின்றும் வந்து தான் மேல்விழுமாட்டாமையாலே "இத்தலையில் நின்றும் ஆள்வருவார்" என்று பார்த்து நின்றானென்னுதல். (இன்றேசென்று) நாளைச்செய்கிறேனென்னவொண்ணாது, நாளைக்கு நானில்லையென்கிறாள். நானில்லாமையாலே அவனுமில்லை, இரண்டுதலையும் பிழைக்கவேண்டியிருந்திருக்கோளாகில் இன்றேசெல்லுங்கோள். இரண்டுதலையும் அழிகை

(க) ஸ்தோ - ர - உ. (ங)

(உ) உசு.

யாவது - ஜகதுபஸம்ஹாரம் பிறக்கையிறே. (நீமருவி) * ஆமருவி நினைமேய்த்தவனுகையாலே திர்யக்ஜாதியான உனக்கு முகந்தரும், நீசென்றுகிட்டி. (நீமருவி) என்னைப்போலே அவனுடைய சீலாதிக்யதனைக்கண்டிவைத்தும், (க) "அவனை நாம் தேவனென் றஞ்சினமே" என்று - அவர்பக்கலிலே * அதஸ்மிந்தத்புத்திபண்ணிப் பிற்காலியாதே அவனேடொருந்தி. (அஞ்சாதேகின்று) * அமரர் கோமானுயிருக்கிறபடியைப் பாத்து அஞ்சாதே * ஆமருவி நினைமேய்த்தபடியைப்பார்த்து, தரித்து நின்று. அங்ஙனன்றியே, (அஞ்சாதேகின்று) "மஹிஷிபக்கல்நின்றும் வந்தார்கள்" என்று தோற்றும்படி மேலிட்டு நின்று வார்த்தைசொல்லுங்கோ ளென்கிறளாகவுமாம். மேலிட்டு வார்தனைசொன்னபோதே என்பக்கல் நின்றும் வருகிறார்களென்றிருக்கும்.

அவனுக்கறிவிக்கும் வார்த்தையேதென்னச், சொல்லுகிறள் மேல், (ஓர்மாது) போர்சொல்லவேண்டா, "ஒருத்தி" என்னவமையும், தாமேயறிவர். "ஒருகாட்டிலே ஒருமான் அம்புபட்டுக்கிடந்துதுடியாகின்றது" என்றுல் எய்தவன் அறியுமிறே. அதவா, (ஓர்மாது) அதவிதீயையாயிருப்பாளொருத்தியென்று சொல்லுங்கோ ளென்கிறள். "அத்விதீயையானமாது" என்றபோதேயறியும். † ஸம்ஸாரிகளுக்குங் கூட்டன்றியே, முக்தருக்குங் கூட்டன்றியே, முமுக்ஷுக்களுக்குங்கூட்டன்றியே, (உ) "பிறந்திட்டாள்" என்னும்படியிறேயிருப்பது.

(நின்நயந்தாள்) சென்றபோதே யறியும், வார்த்தைசொல்லவேண்டிற்றில்லை, ஓர்மாது என்றபோதேயறியும், இவ்வளவு போராது என்றிருந்தாயாகில் ஒருவார்த்தை சொல்லென்கிறள். (நின்நயந்தாள்) படுகொலைபட்டாளென்று சொல்லுங்கோள். † ஒருகாபுருஷனையோ ஆசைப்பட்டது, ? வ்யதிரேகத்தில் ஆற்றவொண்ணுதபடியான வைலக்ஷண்யத்தையுடைய உன்னையன்றே வாசைப்பட்டதென்று சொல்லுங்கோள். (நின்நயந்தாள்) "† பர வ்யூஹ விபவங்களிலே யாசைப்பட்டாளோ ஆறியிருக்கைக்கு" என்று சொல்லுங்கோள். (இறையே யியம்பிக்காணே) நீங்கள வார்த்தைசொல்ல உப

(ஓர்மாது) என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸம்ஸாரிகளுக்கு மித்யாதி).

தாத்பர்யம் (ஒருகாபுருஷனையோவித்யாதி.) த்ருதீயதாத்பர்யம் (பரவ்யூஹேத்யாதி). ... ... (உசு)

(க) உக.

(உ) நி - வாய் - சு - நு - க0.

க்ரமித்தபோதே உங்களை முடியச்சொல்லவொட்டான், அவன்றான் உங்களைக்கொண்டாடுமென்கிறாள். (இறையேயியம்பி) "ஓர்மாத" என்று சொன்னபோதே அவனறியும், (நின்றயந்தாள்) என்கிற வித்து வும் மிகையாம்படியா யிருக்குமென்னவுமாம். (காணே) நீ இவ்வள வுஞ்சொன்னபோதே அவன் உன்னைஸத்காரமெல் லாம் காணவன்றேபுகுகிறாய். (க) "த்ருதஃபரிரக்ஷிதஃ-தர்மதஃபரி ரக்ஷிதஃ" என்பது, (உ)"ஏஷஸர்வஸ்வபூதஸ்துபரிஷ்வங்கஃ-ஏஷஸர்வஸ்வ பூதஸ்துபரிஷ்வங்கஃ" என்று தழுவிக்கொள்ளுவதாகவன்றே புகுகி றான். (காணே) நான் காணப்பெறுத வடிவையன்றே நீகாணப்பு குகிறாயென்னவுமாம். (உசு)

மூ.—செங்காலமடநாராயின்றேசென்று
திருக்கண்ணபுரம்புக்கென்செங்கண்மா லுக்கு
என்காதலென்தூணைவர்க்குரைத்தியாகில்
இதுவொப்பதெமக்கின்பமில்லை,நாளும்
பைங்கானமீதெல்லாமூனதேயாகப்
பழனமீன்கவர்ந்துண்ணதருவன்,தந்தால்
இங்கேவந்தினிதிருந்துன்பெடையும்நீயும்
இருநிலத்திலினிதின்பமெய்தலாமே. (உன)

பதம்.—செங்கால, மடம், நாராய், இன்றேசென்று, திருக்கண்ண புரம்புக்கு, (ரு) என் செங்கண், மாலுக்கு, என் தூணைவர்க்கு, என்காதல், உரை த்தியாகில், (கo) எமக்கு, இதுவொப்பது, இன்பமில்லை, நாளும், இது, (கரு) பைங்கானமெல்லாம், உனதேயாக, பழனம், மீன், கவர்ந்து உண்ண, (உo) தருவன், தந்தால்,உன்பெடையுமநீயும், இங்கேவந்து, இனிதிருந்து, (உரு) இருநிலத்தில், இனிது, இன்பம் எய்தலாம். (உஅ)

உரை.—சிவந்தகால்களையும், மடப்பத்தையுமுடைய, நாரையே! இன் றைக்கே போய், திருக்கண்ணபுரத்திலே ப்ரவேசித்து, (ரு) என்னுடைய புண் டரீகாக்ஷராய், ஆஸ்ரிதவ்யாமுக்தராய், எனக்குவல்லபரானவரிடத்திலே, எனக்கு (அவர்பக்கலுண்டான) வ்யாமோஹத்தைச், சொல்லுவாயே யாகில், (கo) (அவரைப் பிரியில்தரியாத) எமக்கு, இதுக்கு ஸத்ருசமான, ஸுகமி ல்லை; (நீயுள்ள) காலமெல்லால், இந்த, (கரு) பரப்பையுடைத்தான சோலைசூழ் ந்தகாட்டையெல்லாம், உனக்கே உரித்தாம்படிசெய்து, நீர் நிலங்களிலுள்ள, மத்ஸ்யங்களை, மேல்விழுந்து புஜிக்கும்படியாக, (உo) (விருப்பத்தோடே) கொடுப்பேன்; தருவேனேயாகில், உன்மனையாட்டியும்நீயும், இவ்விடத்தில் வந்து, ஸந்துஷ்டசித்தராயிருந்து, (உரு) (இந்த) மஹாப்ருதிவியிலே, அநுகூல ஸுகத்தையடையலாம். (உஅ)

(க) (உ) ரா - யு - க -

வ்யா.—இருபத்தேழாம்பாட்டு. (செங்கால) கீழிற்பாட்டில்-வண்டுகளைத் தூதுவிட்டாள்; அதுசென்று சொல்லி மறுமாற்றங் கொண்டு வருமளவும் தரித்திருக்கச் சக்தியில்லாமையாலே ஒரு நாரையைத் தூதுவிடுகிறாள். (க) "திக்ஷுஸர்வாஸுமார்க்ஷ்வே-திக்ஷுவாஸர்வாஸுமார்க்கந்தே" என்று பிராட்டியைத்தேடுகைக்கு ஸ்ரீவாநரஸைந்யமடையவெனிற்போலே இவளும் கண்டவற்றையடைய வெவுகிறாள். ராமாவதாரத்தில் வாநரஜாதி ஸ்லாக்யமானாற்போலே காணும் ஆழ்வார்களைத் தோற்றி பக்ஷிஜாதி ஸ்லாக்யமானபடி.

(செங்காலமடநாராய்) †ஸம்ஸ்லேஷதசையில் தன்காலை அவன் கொண்டாடக்கண்டிருந்தவளாகையாலே அல்லாத அவயவங்களை விட்டுக் காலைக்கொண்டாடுகிறாள். "இதொருகாலும் சிவப்புமிருந்தபடி யென்" என்கிறாள். ஒரு சிவந்தகாலோடே வாஸனையுண்டுபோலேகாணும் இவளுக்கு. "அபிமதனுடைய கால்போலேயிருந்ததீ! உன்காலும்" என்கிறாள். கருமுகைமாலையைச் சும்மாடுகொண்டாற்போலே தூதுவிலைகமிகையாய் ஸ்தாதர்சநம்பண்ணலாயிருந்ததீ! உன்காலிருந்தபடியென்கிறாள். அவன்காலோடொக்குமென்னுமிடம் தப்பச்சொன்னேனன், தன்காலைத்தருமித்தனையிறே அவன் செய்வது, அவன் காலையுந் தந்து உன்னையுந் தருமேற்றமுண்டே இக்காலுக்கு; நீயும் ஸுலபமாயிருந்து அவனையும் ஸுலபனைக்குமேற்றமுண்டேயுனக்கு.

(மடநாராய்) அறிவுகெட்டநாராய்! (மடம்) என்று-இங்கு அறிவின்மையைச் சொல்லுகிறது. ஸ்தோத்ரம்பண்ண விழுந்தவள் இங்ஙன் சொல்லக்கடவளோவென்னில்; நிந்தாஸ்துதிபோலே இதுவுங் கொண்டாட்டத்திலேயொன்றுயிருக்கிறது. நிந்தாஸ்துதியாவது - ஆபாதப்ரதீதியிலே நிந்தைபோலேயாய், விழுக்காட்டிலே ஸ்தோத்ரமாயிறேயிருப்பது. ஸம்ஸ்லேஷதசையில், (உ)"நஞ ஸ்ம்ஸ்நேவசக்ரமः-கஶாஸ்த்ரம்ஸ்நேவசக்ரமः" என்கிறபடியே, அறிவழிந்து முறைகெடப் பரிமாறுகையிறே ப்ரணயித்வத்தில் உனக்குண்டான கௌசலமென்கிறாள். முறையிலே பரிமாறில் ஸ்வரூபத்தை நோக்கிற்றிலுமித்தனை யொழிய ப்ரணயியன்றிக்கே யொழியுமிறே. †என்னிழவு தீரும்படியான பூர்த்தி உனக்குண்டாகப் பெற்றேனென்கிறாள்.

இருபத்தேழாம்பாட்டு. (செங்காலமடநாராய்) காலைமுற்படக் கொண்டாடுவானென்னென்ன; அருளிச்செய்கிறார் (ஸம்ஸ்லேஷதசையிலித்யாதி).

(மடப்பம்) என்று - ஸ்த்ரீத்வமாய், அத்தை - அல்லாத ஆத்மகுணங்களுக்கும் உபலக்ஷணமாக்கி தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னிழவுதீரும்படியானவித்யாதி).

(க) ரா - ஸு - கo - கூ. (உ)

(நாராய்) என்கிற உக்தி, அம்மே! என்பாளைப்போலே யிருக்கிறதா யிற்று. வழிபறியுண்கிறதசையிலே தாய்முகத்திலே விழித்தாற்போ லேயாயிற்று அவஹேளப்பிரிந்து நோவுபடுகிறதசையிலே இதின் ஸந் நிதியுண்டானவிது. (க) "పమ్పాతీరేహనుమతాసజ్ఞతః-పம்பாதீரே ஹநுமதாஸங்கதஃ" என்று பிராட்டியைப்பிரிந்து ஸ்மாரக பதார்த் தங்களின்கையிலே பெருமாள் நோவுபடுகிறதசையிலே திருவீடி வந்து ஸந்நிஹிதனானவிது வழிபறியுண்டதசையில் தாய்முகத்திலே விழித்தாற்போலே யிருந்ததிறே பெருமாளுக்கு. (நாராய்) என்ற போதையார்த்தி இசையிலேயிறே தோற்றுவது; ராஜமஹிஷியாகை யாலே கைக்கூலிதந்து கார்யஞ் செய்யவேண்டும்படி யன்றே வென் னுடைய வேற்றமிருப்பது.

நீ அபேக்ஷிக்கவேணுமோ, கார்யத்தைச் சொல்லலாகாதோ வென்னச் சொல்லுகிறாள். (இன்றேசென்று) நாளைச்செய்கிறேனெ ன்னுமதன்று. அவன்படியைப்பார்த்தாலும் நாளைச்செய்யுமதன்று, என்படியைப்பார்த்தாலும் நாளைச்செய்யுமதன்று.(உ)"నజీవేయంక్షణమపి-நஜீவேயம்க்ஷணமபி" என்னும்படியாயிற்று அவன்படி; (ங) "జలాన్నత్స్యవివోద్ధృతౌ-ஜலாந்மதஸ்யாவிவோத்ருதௌ" என்னும் படியாயிற்று என்படி.

(திருக்கண்ணபுரம்புக்கு) ருஷிகளும் அல்லாத ஆழ்வார்களும் சொல்லுமாபோலேயன்றுகாணும்- இவர் திருக்கண்ணபுரமென்றுளி ருக்கும்படி. அவர்களளவன்றே இவர்க்கு அவ்வூரிலுண்டான பாவ பந்தம். அநந்தாழ்வான் "திருவேங்கடமுடையான்" என்னுமாபோ லேயும், பட்டர் "அழகிய மணவாளப்பெருமாள்" என்னுமாபோ லேயும், சோமாசியாண்டான் "எம்பெருமானாரசரணம்" என்னு மாபோலேயும் இராதிறே நாம் திருநாமங்களைச் சொல்லும்போது. (கண்ணபுரம்புக்கு) திருவழுந்தூரிலே தூதுவிட்டாளாகில் பின்பும் அங்கே விடமதொழிய இங்கே விடிவானென்னென்னில்; திருவழுந் தூரில் அவன் தரிக்கமாட்டான், வண்டும் தானும் அரைகுலையத் தலைகுலைய எதிரேவந்து ஒருபயணம் புகுராநிற்கும், அங்கே செல் லுங்கோளென்கிறாள்.

(என்செங்கண்மாலுக்கு) (என்மாலுக்கு) உபய விபூதியும் தாமி ட்ட வழக்காயிருக்கிறவர், நானிட்ட வழக்காமபடி என்னபிமாநதே

(க) ரா - பா - க - நிஅ. (ங) ரா - அ - நிங - ஙக.

(உ) ரா - ஸு - சுசு - கo.

படங்கியிருக்கிறவர்க்கு. (செங்கண்மாலுக்கு) கண்ணழகைக்காட்டி என்னை "ஜிதம்" என்னப்பண்ணித் தம்மபிமானத்தேஷியிட்டுக்கொண்டவர்க்கு. (செங்கண்மாலுக்கு) (க) †"அஸ்த்ரஸ்ஸதம்ராமஃ-அக்ஷத்ரஸ்ஸதம்ராமஃ" என்கிறபடியே என்னைப் பிரிகையாலே அவர்க்கு உறக்கமில்லை, அத்தாலே கண் குதறிச் சிவந்திருக்கும், அது உங்களுக்கு அடையாளமென்கிறளாகவுமாம். (மாலுக்கு) பெரும் பித்தர்க்கு. தம்முடைய பிதற்றைக்காட்டி என்னைப்பிச்சேற்றினவர்க்கு. பிச்சேறியிருக்குமத்தனையிறே இதற்குள்ளது, பிச்சேறியிருக்கையும் எதிர்த்தலையைப பிச்சேறறுகையும் அத்தலைக்கேயிறேஉள்ளது. (உ) "மாலாய்ப்பிறந்த நம்பியை மாலேசெய்யும் மணாளனை" என்னக்கடவதிறே.

(என்காதல்) தம்முடைய காதல்போலன்றென்று சொல்லுங்கோள். (ங) "மின்னிலங்கு திருவுருவு" என்று- உடம்பு குறியழியாதபடியன்றே நீர் காதல்பண்ணிற்று, (ச) * பொங்கார்மென்னிளங்கொங்கை பொன்னேபூக்கும்படியன்றே அவள்காதல்பண்ணினற்று என்னுங்கோள். (என்காதல்) (ஞ) †"யாபீதிரவிவேகானாம் விஷயேஷ்வநபாயினீ-யாப்ரீதிரவிவேகானாம் விஷயேஷ்வநபாயினீ" என்கிற § (படியே) நாட்டார் காதல்போலன்று, முக்தர்காதல்போலன்று காணும் இவளுடையகாதல். ஜ்ஞானம்பிறந்தவாறே த்யாஜ்யமானகாதலிறே ஸம்ஸாரிகளது, ஸுகஹேதுவான காதலிறே முக்தரது.

(என்துணைவர்க்கு) எனக்கு அவர்ஜீவனபத்துவாயிருக்குமவர்க்கு; எவ்வவஸ்த்தையிலும் எனக்குத்துணையாயிருக்குமவர்க்குச் சொல்லுங்கோள். விழுகமானதசையிலே ஸத்தையைநோக்கிப்பின்பு ஆபிமுக்யத்தைப் பிறப்பித்து, ஸம்ஸ்லேஷித்துப் பிரிந்தபின்பும் ஸத்தைகிடக்கும்படியிறே அவர்துணையாயிருக்கும்படி. (என்துணைவாக்கு) † இவ்வாற்றுமையைப் பரிஹரிக்குமவர்க்குச் சொல்லுங்கோள். (உரைத்தியாகில்) சொல்லுவதியாகில். (ஆகில்) என்றுகடகரை இரக்குமதொழிய நியமிக்க ப்ராப்தியில்லையிறே; அத்தாலே திருவுள்ளமாகில என்கிறள். (உரைத்தியாகில்) † அவரழகிலேகால் தாழ்ந்து போனகார்யத்தைமறவாதே என்தசையை அறிவிப்புதியாகில். (உரைதந்தி) (சு) "வாசாதர்மமாவ்நுஹி-வாசாதர்ம

(செங்கணைமால்) என்றதுக்குத் தாத்பர்யம் (அஸ்த்ரஸ்ஸதமித்யாதி). வ்யாவ்ருத்யந்தரம் (யாப்ரீதிரித்யாதி).

தாத்பர்யம் (இவ்வாற்றுமையித்யாதி). அர்த்தாந்தரம் (அவரழகிலேயித்யாதி).

(க) ரா-ஸு-நகு-சகு. (ங) உஞ. (ஞ) வி-பு-க-உ0-கக.
(உ) நா-தி-கச-ஙு. (ச) கள. (சு) ரா-ஸு-நக-க0.
§ குண்டலிதம் அதிகம்.

மவாப்நுஹி'' என்கிறாள். உனக்கு ஒருவார்த்தை, நான்பெறுகிறது ஸத்தையென்கிறாள்.

(இதுவொபபதெமக்கின்பமில்லை) எனக்கு இத்தோடொத்த ப்ரியமில்லை; நீ உரைக்கையாகிற விதுக்குமேற்பட்ட ஸுகமில்லை. அவனோடு ஸம்ச்லேஷித்தாலன்றோ ஸுகளித்தியுள்ளது, அறிவித்தமாத்ரத்திலே ஸுகளித்தியுண்டாமோவென்னில்; ''அறிவிக்குமது வேவிலம்பம், வரவு தப்பாது'' என்றிருக்கையாலே சொல்லுகிறாள். (நாளுமித்யாதி) எனக்கு உபகரித்துவிடுமளவுபோராது, உபகாரஸ்ம்ருதியாலே நான் பண்ணும் கிஞ்சித்காரத்தையும் அங்கீகரிக்கவேணுமென்கிறாள். (நாளுமிதயாதி) ஆசார்யன் ஒருகால் உபகரித்துவிடுமித்தனை, சிஷ்யன்யாவதாயுஷம் அநுவர்த்திக்கக்கடவனென்கை. (பைங்கானமீதெல்லாம்) தன்னபிமாநத்தில் கிடந்ததைக் கொடுக்குமத்தனையிறே செய்யலாவது, பரப்பையுடைத்தான கடற்கரைச்சோலையடைய. பிரிந்தாரிரங்குமிடம் நெய்தலாகையாலே கடற்கரையிலே தானிருக்கிறதாகையாலே ''பைங்கானமீதெல்லாம்'' என்கிறாள். (ஈதெல்லாம்) தன்கண்ணற்கண்ட பரதேசத்தை யடையக்கொடுக்கிறாள். என்விபூதியடங்கலும் தருவனென்கிறாள். இது-உபயவிபூதிக்கு முபலக்ஷணம். (க) ''பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ'' என்னக் கடவதிறே. (உனதேயாக) எனக்கும் உனக்கும் பொதுவாகவன்றியே உனக்கே சேஷமாம்படி தருவேன். (பழனமீன்) நீர்மாறுதேயிருக்கையாலே மத்ஸ்யங்களும் ஆனைக்கன்றுபோலேயிருக்குமிறே. (உ) '' यदन्नःपुरुषो भवतितदन्नाःस्तस्यदेवताः-यतन्नःपुरुषोपवदितततन्नास्तस्यतेवताः'' என்கிறபடியே தனக்குளித்திக்க அம்சத்தைக்கொடுக்கலாவது அவனுக்கிறே, கடகர்க்கு, அவர்களுகந்தது தேடிக் கொடுக்கவேணுமென்கை. (கவர்ந்துண்ணத்தருவன்) மேல்விழுந்து புஜிக்கும்படியாக ஸாதரமாகத்தருவேன்.

(தந்தால் இங்கேவந்து) உங்கள்பூர்த்தியாலே நான் பண்ணின கிஞ்சித்காரத்தைஸ்வீகரித்துகோளாய்ப் போகையன்றியே என்ஸந்நிதியிலே புஜிக்கவேணும். (வந்து) அவனைப்போலே உபகரித்தபின்பு வாராதொழியாதே நானிருந்தவிடத்தே வந்து புஜிக்கவேணும். (உன்பெடையும் நீயும் இனிதிருந்து) ஏகாகியாய் வந்திருக்கவொண்ணாது, அபிமதவிஷயத்தோடேகூட வந்திருக்கவேணும். அது தனக்குத் தேட்டமிறே. (இருநிலததிலினிதின்பமெய்தலாமே) (க) * ஸந்த்ருஷ்டிபோஜநம்-அந்தக்லேசபாஜகமான ஸமஸாரத்திலே (ச) * அந்தமில் பேரின்பத்தை பராபிக்கலாம். (ஞ) ''நல்ல

(க) நி - வாய -சு-அ-க. (ச) நி-வாய்-கo- கு -கக.
(உ) ரா-அ-கoங-கஞ. (ஞ) ,, அ-கo-கக.
(ங) ஜி-ஸ்தோ-ச.

திருநெடுந்தாண்டகம்-உ அ-பா-தென்னிலங்கை வ்யாக்யானம். உநநி

பதத்தால் மனைவாழ்வர்'' என்கிறபடியே வாழப்பெறலாம். † வை ஷ்ணவர்கள் சரீரஸம்பந்தயுக்தராகையாலே அபேக்ஷித்ததசைகளி லே அபேக்ஷிதங்களைக் கொடுத்து வர்த்திக்கும்கார்ஹஸ்த்யத்தால் வந்தவேற்றமில்லையிறே நிதயவிபூதியில் ... ... (உன)

மூ.—தென்னிலங்கையரண்சிதறிபவுணன்மாளச்
சென்றுலகமூன்றினையும்திரிந்தோர்தேரால்
மன்னிலங்குபாரதத்தைமாளவூர்ந்த
வனையுருவின்மாகளிற்றைத்தேழீ, என்றன்
பொன்னிலங்குமுலைக்குவட்டில்பூட்டிக்கொண்டு
போகாமைவல்லேனைப்புலவியெய்தி
என்னிலங்கமெல்லாம்வந்தின்பமெய்த
எப்பொழுதும்நினைந்துருகியிருப்பன்நானே. (உஅ)

பதம்.—தேழீ, இலங்கை, தென், அரண், சிதறி, (இ) அவுணன், மாள, சென்று, உலகமூன்றினையும், திரிந்து, (கo) மன், இலங்கு, பாரதத்தை மாள, ஓர்தேர்ஊர்ந்த, வனையுருவின், (கஇ) மா, களிற்றை, வல்லேனை, என் றன், பொன்இலங்கு, (உo) முலைக்குவட்டில், போகாமை, பூட்டிக்கொண்டு, புலவியெய்தி, என்னிலங்கமெல்லாம், (உஇ) வந்து, இன்பமெய்த, எப்பொழு தும், நான், நினைந்து, (ஈo) உருகியிருப்பன். (ஈக)

உரை.—என் உயிர்ப்பாங்கியே! லங்காநகரத்திலே, தர்சநீயமான, கோ ட்டையை,அழித்து, (இ) ராவணஸஞ்சாரன், முடியும்படியாக, (அந்நகரத்திலே) ப்ரவேசித்து, மூன்றுலோகங்களையும், ஸஞ்சரித்து, (திருவடிகளாலேயளந்து), (கo) அரசர்கள் விளங்காநின்றுள்ள, பாரதஸமரம்முடியும்படி, ஒருதே ரை (ஸாரதியாய்நின்று) நடத்தின, மலைபோலேயிருந்துள்ள நிறமையையு டைய, (கஇ) பெரிய, யானைபோலேயிருந்துள்ளவனை, ஸமர்த்தையாய்க்கொ ணடு, என்னுடைய, வைவர்ண்யத்தையுடைத்தான, (உo) ஸ்தநங்களாகிற ஸ்தம்பத்திலே, (அவன்) புறம்புபோகாதபடி, சேர்த்துக்கொண்டு, (அவனைப் பிரிந்து படுமை) க்லேசத்தை (அவன் ஸந்நிதியிலே) யடைந்து, என்னுடைய ஸர்வாவயவங்களும், (உஇ) என்னிடத்தே வந்து, ஆநந்தத்தை யடையும்படி யாக, ஸர்வகாலத்திலும், (விச்லேஷாஸஹையான) நான், (அவனை) நினை த்து, (ஈo) அழிந்துவிடுவேன். (ஈக) (உஅ)

வ்யா.—இருபத்தெட்டாம்பாட்டு. (தென்னிலங்கை) நம்மாழ் வார் (க) * வைகல்பூங்கழிவாயிலே தூதப்ரேஷணம் பண்ணி அநந்த ரம் அவன் வந்து முகங்காட்டக் காணுமையாலே ப்ரணயரோஷம்

''நல்லபதத்தால் மனைவாழ்வர்'' என்றதுக்கர்த்தம் (வைஷ்ணவர்களி த்யாதி). . ... (உஎ)

(க) தி - வாய் - சூ - க -

தலையெடுத்துளடிறற்போலே இவளும் தூதுவிட்டு இதிலே யூடு கிறாள். தூதபரேஷணம் பண்ணும்படியான ஆற்றுமைக்கு மவ்வ ருகே ஒருதசாவிசேஷமிறே ப்ரணயரோஷமாகிறது; அப்படியே அத்தசையிலே வெள்ளிடி விழுந்தாற்போலே மநப்பரஸாதம் பிற ந்து தெளிந்து, "நம்மாற்றுமை யிருந்தபடியாலும் தூதப்ரேஷணம் பண்ணுகையாலும் சுபநிமித்தங்கள் செய்கையாலும் அவன்வரவு தப்பாது" என்று நிர்ணயித்து, "அவன்வந்தால் முகங்கொடுக்கக்கட வோம லல்லோம்" என்று அதயவஸித்தாள். அதுக்கு ஹேது வென் னென்னில்; "அவனுடைய ஸம்ஸ்லேஷம் விஸ்லேஷாந்தமா யல்ல திராமையாலே இன்னமொரு விஸ்லேஷத்துக்கு இலக்காயிருந் தக்லேசபடுமதிறகாட்டில் அவன் வந்தால் முகங்கொடாதே அவன் ஸந்நிதியிலேமுடிந்துபிழைக்கக்கடவோம்" என்று பார்த்தாள்; தாந் தாம் முடியவினைபபார் வெற்றிலேதின்பது, பூச்சூடுவது, சிரிப்ப தாமாபோலே, அகவாயழியாநிற்கச் செய்தே இவள தெளிந்திருக்க, அத்தைக்கண்ட தோழியானவள், "ப்ரணயரோஷம் தலையெடுக் கும்படியான ஆற்றுமை செல்லாநிற்கச்செய்தே நிஸ்ஸங்கமாக இவள் தெளிந்திருந்தாள், இதுக்குஹேதுவென்?" என்றுபார்த்து, "நெஞ்சி லோடுகிறதென்?" என்று கேட்க; "அவன்வந்தால் பண் டுபோலே முகங்கொடுக்கக்கடவேனல்லேன், அவன்ஸந்நிதியிலே முடியக்கடவேனை அதயவஸித்தேன்" என்ன; "கெடுவாய்! மலை யோடே மல்பொருத மல்லருண்டோ,? உபய விபூதி நாயகனை ஸர்வ சக்தியா யிருக்கிறவனோடே அபலையான நீ எதிரிடுகையாவ தென்?" என்று, தோழிக்கு இவள் தன்னிலுங் காட்டில் ரோஷம் கனத்திருக்கையாலே, "ப்ரணயிகளோடு செய்யுமத்தை ப்ரபுக் களோடு செய்யக்கடவதோ?" என்ன; "அவர்ப்ரபுத்வமும் நாடா னும்படியும் என்கையிலே படும்பாடுபாராய்" என்ன; "இவளத் யவஸாய மிருந்தபடியால் முடியும்போலேயிருந்தது, ப்ரணயரோ ஷததவிலேயாய் முடியாதபடிநோக்கவேணும்" என்று பார்த்து, "ஆஸ்ரிதர்க்கு அவன் முகங்கொடுக்கும்படி இதுகாண்" என்று சொலல; "அமையும், எலலாம்பகட்டுக்காண், நான் முடிகைதவி ரேன்" என்கிறாள். ப்ரணயிநி யான இவளோழியத் தோழிக்கு ரோஷம் தலையெடுக்கக்கூடுமோவென்னில்; வீதராகனைச் சரணி லதின்று போந்த ஸ்ரீவால்மீகி பகவான் பிராட்டியைக்கண்டு,

---

இருபத்தெட்டாம்பாட்டு. (தென்னிலங்கை) அவதாரிகாவாக்யங்களுக்கு நிதாநம (வையுநவின்மாகளிற்றை) என்றது.

திருநெடுந்தாண்டகம்-உ அ-பா-தென்னிலங்கை வ்யாக்யாநம். உநன

(க) "ஹீநோயதநயாப்ரபுஃ-ஹீநோயதநயாப்ரபுஃ" என்று பெரு மாள் நாடாளவும் ஆனைகுதிரை கட்டவும் கற்றூரித்தனேபோக்கி ப்ர ணயித்வத்தில் புதிய தண்டிலராகாதே! என்றூனீறே. முற்படத் தோழி, அவன் ஆஶ்ரிதர்க்கு முகங்கொடித்த ப்ரகாரத்தைச்சொல்ல, அத்தை யநுபாஷித்து அவையெல்லாம்பகட்டுக் காணென்கிறூள்.

(தென்னிலங்கையரண்சிதறி) மேல், "வனையுருவின்மாகளிற் றை" என்கையாலே † யானையினுடைய வ்யாபாரமாகப் பேசுகி றூள் - இவ்வபதாநங்களேயெல்லாம். லங்கையில் தர்சநீயமான வர ணச்சிதறி. அரணின்வலியிறே வீரர்களுக்குத் தர்சநீயமாயிருப்பது. திருவடி பிராட்டியைத்தேடி லங்கையிற்சென்றபோது லங்கையி னரணையும் ராவணனுடைய பலத்தையும்பார்த்து, "இவ்வரணிருந் தபடி-யால், நான் புகுதல், என்தமப்பனை வாயுபுகுதல், வைநதேய ன்புகுதல் செய்யுமித்தனே யொழிய வேறொருத்தரால் புகுரவொ ண்ணாது, அதுதன்னிலும் ராத்ரி புகுருமதொழியப் பகல் புகுரவொ ண்ணாதாயிற்று அரணிருந்தபடி; இதுக்கு அத்யக்ஷனைவன் றன்னு டையபலமிருந்தபடி யென்னென்னில், வெளிநிலத்திலே எதிரிகளைத் தனியேஜயிக்கவல்லவனுயிருந்தது, இப்படிப்பட்டதேசத்திலே ஸை குமாரரான ராஜகுமாரர்களைக் கொண்டுவரதேடாகின்றூம்" என் று திருவடிநெஞ்சுளுக்கும்படியிறே அரணிருந்தபடி. (சிதறி) ஓர ணமணற்கொட்டகத்தைச்சிதறினாற்போலே அநாயாஸேநவழித்து. ஒருகல்லும் மரமுமாகிலிறே "இடறி" என்பது, பெருமாளுடைய வீரத்தைக் கேட்டிருந்தமாத்ரதைக்கொண்டு, (க) "ய்ஹ்நைக்த ஸம்ஹ்ருஸ்யதாஸைகதமம்பஸி' என்று ஓரரண மணற்கொட்டகத் தை யழிக்குமாபோலேகாண் பெருமாள்கையில் கீயும் உன்பரிகர மும் அழியுண்ணப்போகிறபடி என்றூரிறே ஸ்ரீ விபீஷணழ்வான். (அவுணன் மாளச்சென்று) ராவணன்முடியும்படிசென்று. சென்ற செலவிலே ம்ருதனுனன், பின்னைப்பிணம்வெட்டி வாள்முறிந்த வித் தனையாயிற்று. அதாகிறது-ஒருமதஹஸ்தி வழிபோகாகின்றூல் முன் கண்டவற்றையடையக் கையாலுங் காலாலு மழித்துக்கொண்டுபோ மாபோலே கரதூஷணப்ரப்ருதிகளை நிரஸித்து, தன்னை வாலிலேகட் டிக்கொண்டுதிரிந்த வாலியை நிரஸித்து, கடற்கரையிலே சென்று விட்டு லங்கைக்கரணைகடலே அணைசெயது, லங்கையைச்சென்று

(சிதறி - மாள) என்கையாலே - யானையினுடைய வ்யாபாரமாகப் பேசுகிறூனென்றபடி.

(க) ரா-ஸு-கி-நி.

(உ) ரா - யு -

அடைமதிட்படுத்தினபடியைக் கண்டபோதே ம்ருதனுனென்னை. ஒருப்ரணயிநிக்காக அவன் பண்ணின வ்யாபாரமிதுவன்றோவென்ன; அவன் பரமப்ரணயியன்றோ, அபலைகளாயிருப்பார் அகப்படினைக்காகச்செய்த தொன்றுகையாலே அதுவும் பகட்டிக்காணென்கிறாள்.

(உலகமூன்றினையுந்திரிந்து) சதுர்த்தசபுவநத்தையுமளந்து ஓருமதஹஸ்திஸ்வைரஸஞ்சாரம் பண்ணுமாபோலே எல்லார்தலைகளிலும் ஸ்வைரமாகத் திருவடிகளைவைத்தபடியாலே (திரிந்து) என்கிறது. பரணயிநிக்கு முகங்கொடுக்கையன்றியே அந்யசேஷத்வதாஹும் ஸ்வஸ்வாதந்த்ர்யத்தாஹும் விமுகராயிருப்பார் தலைகளிலுமகப்படாத திருவடிகளை வைக்கும் ஸ்வபாவனன்றோவென்ன; அவன் விசேஷஜ்ஞன்காண், விமுகர்தலையிலே திருவடிகளைவைக்குமதொழிய (க) "எம்பெருமான்திருவடிக்கீழணைய" என்றிருப்பார்க்கு முகங்கொடுக்குமவனன்றுகாணென்கிறாள்.

(ஓர்தேரால் மன்னிலங்கு பாரதத்தைதமாளவூர்ந்த) (ஓர்தேரால்) எதிரிகள், "க்ருஷ்ணன் ஆயுதமெடுக்கவேண்டா" என்றவித்தனையொழியத் "தூதுபோதல், ஸாரத்யம்பண்ணுதல் செய்யவேண்டா" என்றிலர்களே, ஆகையாலே ஸாரதியாய் நின்று ஒருதேராலே யழியச்செய்தான். "இன்னதனைக்கொண்டு இன்னகார்யஞுசெய்யக்கடவோம" என்னும் நியதியில்லையிறே. (உ) "கொல்லாமாக்கோல் கொலைசெய்து" என்னகடவதிறே. (மன்னிலங்குபாரதத்தை) அதிரதமஹாரதரான பீஷ்மாதிராஜலோகங்கள முன்துரகியிலே ஐஞ்சரிக்கும்படியான பாரதத்தை. (மாளவூர்ந்த) பிணமுங் கண்காணாதபடியாகத் தேரைநடத்தின. (ங) "ஆடியமாநெடுந்தேர்படைநீறெழச்செறறபிரான்" என்கிறபடியே தேர்க்காலிலே துகையுண்டு தூளியாய்ப்போம்படியாயிற்றுத் தேரைநடத்தினபடி. தன்னை யொழியசெல்லாதேயிருபபாளொருதநியுடைய குழல் முடிபபிக்கைக்காக அவன் பண்ணின வ்யாபாரமிதுவன்றோவென்ன; "ஒருதநி குழலைமுடிப்பிக்கைக்காகத் தன்னையழியமாறி வ்யாபரிப்பதே!" என்று காட்டானைப்பகட்டிகைக்காகச்செய்தானித்தனை, தன்னையொழியச்செல்லாதாகுழலை விரிபபிக்குமவன்காணென்கிறாள்.

(வனாயுருவின்மாகளிற்றை) மலைபோலேயிருந்துள்ள திண்மையையும் செருக்கையுமுடைத்தான ஆனைபோலேயிருந்துள்ளவனை. ஆஸ்ரிதவிரோதி நிரஸநத்தில் திண்ணியனையிருக்கையும், ஆஸ்ரிதர்

(க) உஉ.
(உ) தி - வாய் - சு - உ - ங.
(ங) தி - வாய் - சு - அ - ங

திருநெடுந்தாண்டகம்-உ அ-பா-தென்னிலங்கை வ்யாக்யாநம். உருக

காரியஞ்செய்த ப்ரீதியாலேவந்த செருக்கையுமுடையவனே. (தோழீ) என் கையாலே அவன்படும்பாடு காணவிறேபுகுகிறாய். அங்ஙனன்றியே, (க) "ஏகந்து: கஂஸுகஜ்ஜ நா-ஏகம்துகூலம்ஸ-கஞ்சநெள" என்றிருக்கிறவளாகையாலே நீ விலக்காயாகில் அவன்படும்பாடு பாராயென்னுதல். (தோழீ) நீ விலக்காதொழியவேணும்.

(என்றனித்யாதி) என்கையில் ப்ரஹ்மாஸ்த்ரமிருக்க ஜயிக்கவொண்ணுதகிலமுண்டோ? (என்றன் பொன்னிலங்குமுலை) நாட்டார்முலையெழுந்தாற்போலேயோ என்முலையெழுந்தபடி. அவன் முலையெழுந்தாற்போலேயோ என்முலையெழுந்தபடி. (பொன்னிலங்குமுலை) அவனுடைய பும்ஸ்த்வம்போலேயோ என்னுடைய ஸ்த்ரீதவமிருப்பது. வ்யதிரேகத்தில விவர்ணமாம்படியன்றே வென்னுடைய ஸ்த்ரீத்வம். (உ) "மின்னிலங்குதிருவுரு" என்று-வ்யதிரேகத்தில் வடிவு ஏகரூபமாயிருக்கும்படியன்றே அவனுடைய பும்ஸ்தவமிருப்பது. ஸதைகரூபமான வடிவையுடையவனுக்கு §வாவுண்டோ? (முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு) முலையாகிறஸ்தம்பதேதாடே சேர்த்துக்கொண்டு. ஸ்தம்பத்தேதாடே சேர்க்கையாவது-தன்னுற்ருமையை ஆவிஷ்கரிக்கை. (போகாமல்-பூட்டிக்கொண்டு) என்பக்கல் முகம்பெருமையாலே போகத்தேதுமேபோது என்னுற்ருமையை யடங்க ஆவிஷ்கரிக்கக்கடவேன். (முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு) † * வையுருவின் மாகனிருகையாலே ஒரு மலையிலே சேர்க்கவேணுமிறே. (வல்லேணை) இதொன்றுமே குறை யென்கிறாள். என்மநஸ்ஸு-ஸஹகரிக்கப்பெறில்; அவன் வந்து முகங்காட்டினால் நெஞ்சு மேல்விழாதொழியப்பெறில்; நீயும் நிஷேதியாதேஸஹகரிக்கப்பெறில். நெஞ்சிலுங்காட்டில் அந்தரங்கையிறேதாழி. (புலவியெய்தி) அவனைப்பிரிந்து படும் க்லேசத்தை யெல்லாம் அவன் ஸந்நிதியிலே படக்கடவேனென்கிறாள். அதவா, (புலவியெய்தி) அவனைப் பிரிந்து நாம் பட்டபாடிதனையும் அவன்றான் என்ஸந்நிதியிலே படும்படி பண்ணக்கடவேனென்கிறாளாகவுமாம்.

(என்னிலங்கமெல்லாம் வந்தின்பமெய்த) இன்னமொரு விஸ்லேஷத்துக்கிலக்காயிராதபடி அவன் ஸந்நிதியிலே முடிந்து பிழைக்கக்கடவேன். (என்னிலங்கமெல்லாம்) "இதொரு கண்ணிருந்தபடியென், இதொரு மூறுவலிருந்தபடியென், இதொருமுலையிருந்தபடி

(குவடு) என்றதுக்கு (மலை) என்று அருளிச்செய்கிறார் (வையுருவின் மாகனிருகையாலேயித்யாதி). . . .. (உ அ)

(க) ரா கி - நு - கஅ. (உ) உநு. § (பா) வாயுண்டோ.

யென்" என்றுற்போலே அவன் கொண்டாடும்படி அவனுக்கு ஆத ரணீயமான வென்னுடைய ஸர்வாவயவங்களும். (இன்பமெய்த) "கூடாமகாலத்தில் குடும்பியாயிருக்குமவன் குடும்பத்தினுடைய பகி யும் தன்பகியும் பொறுக்கமாட்டாமையாலே ஸகுடும்பமாய் ஆற் றிலே புக்குமுடியும்" என்னுமாபோலே என் அவயவங்களோடே கூட முடியக்கடவேன். (வந்து) கன்றுவேறு, தாய்வேறுக்கும்விஷ யமிறே, ஸ்ரீபரதாழ்வானையும்கைகேயியையும் போலே; ஆகையாலே, தனித்தனியே சேதநஸமாதியாலே அவ்விஷயத்திலே ப்ரவணமாயி றேயிருப்பது. அவை அங்குநின்றும் மீண்டி ஆஸ்ரயபூதையான என்னிலேடகூடிமுடிகையிலே உத்யோகிக்கை. (இன்பமெய்த) முடி யக்கடவேனென்னுமதனை (இன்பமெய்த) என்கிறாள் - முடிகை தான் பரமபதஸ்தாநீயமாம்படியானவாற்றுமையாலே. (எபபொ ழுதும்) எவ்வவஸ்தையிலும். "அவன் வாராதபடியாலே சொல் லுகிறாய், வந்து முகங்காட்டினவாறே, (க) 'மைவண்ணம்' இதயா தியிற் சொல்லுகிறபடியே அவன் ஸௌந்தர்யத்தைக் கண்டவாறே நீ மேல்விழுகிறாய்" என்ன; அத்தசையிலும் முடியக்கடவேன். (எபபொழுதும்) சேஷித்வத்தால் வந்த ப்ராப்தியைக்காட்டிலும் முடியக்கடவேன்.

(நினைந்துருகியிருப்பன்) நினைத்தமாதரத்திலே யழிந்திருப்பன். அவன் வந்து ஸந்நிஹிதனாய், தன் செல்லாமையைக் காட்டினால் அழிகையன்றியே மநோரதித்தமாத்ரத்திலே யழியும்படியாயிற்று இவளுடைய *ஸௌந்தர்யமிருப்பது. நம்மாழ்வாருக்கு ப்ரணயரோ ஷம் தலையெடுத்தபோது அவன்வந்து முகங்காட்டினவளவிலும் தோழியுந்தானுமாக அவனுக்கும் புகுரவொண்ணுதபடி ப்ரணய ரோஷமாகிற மதிளையிட்டுக்கொண்டுநிற்க க்ரமத்தாலே தன்செல் லாமையைக் காட்டிப் ப்ரணயரோஷத்தை யழிதலுக் கிட்டவேண் டிற்று, இவர் நினைப்பதுக்குமுன்னே யழிந்தார். (நானே) "புறம்பு கண்டறியோமீ!" என்ன; என்ப்ரக்ருதியிருக்கும்படி யிதுவென்கி றாள். அல்லாதார் ஒன்றை ஸங்கல்பிததால் அத்தைமுடிய நடத்த வும் வல்லர்களாயிருபபார்கள், ஸங்கல்பிததபோதே யழியுமபடியா யாயிற்று நானிருபபது. ... ... (உஅ)

மூ.—அன்றுயர்குன்மகளுக்கணையன்றன்னை
அலைகடலைக்கடைந்தடைத்தவம்மான்றன்னைக்
குன்றுதவலியரக்கர்கோனைமாள
கொடுஞ்சிலைவாய்ச்சரந்துரந்துகுலங்களைந்து

---

* ஸௌகுமார்யமென்றும் பாடம். (க) உக.

திருநெடுந்தாண்டகம்-உக-பா-அன்றுயர் வ்யாக்யாநம். உசக

வென்றுனைக், குன்றெறிந்ததோளினனை
விரிதிரைநீர்விண்ணகரம்மருவிநாளும்
நின்றுனைத், தண்குடந்தைக்கிடந்தமாலை
நெடியானையடிநாயேன்நினைந்திட்டேனே. (உக)

பதம்.—அன்று, ஆயர்குலமகளுக்கு, அரையன்றன்னை, அலைகடலை, கடைந்து, (ரு) அடைத்த, அம்மான்றன்னை, குன்றுதவலி, அரக்கர்கோனை, (க0) மாள, கொடுஞ்சிலைவாய், சரம், துரந்து, குலம், (கரு) களைந்து, வென்றுனை, குன்று, எடுத்த, தோளினனை, (உ0) விரி, திரை, நீர், விண்ணகரம், நாளும்மருவினின்றுனை, (உரு) தண், குடந்தை, கிடந்த, மாலை, நெடியானை, (ந0) அடி, நாயேன், நினைந்திட்டேன். (நந)

உரை.—கும்பர்எழுருஷபங்களைக் கந்யாசுல்கமாக வைத்தவன்று (அவற்றை நிரஸித்து), இடைக்குலத்திலவதரித்த பெண்ணை நப்பின்னைப்பிராட்டிக்கு, வல்லபனைவலியவனாய், அலைகளையுடைத்தானஸமுத்ரத்தை, (அம்ருதத்துக்காக) மதநம்பண்ணி, (ரு) (ராமாவதாரத்தில்) ஸேதுபந்தம்பண்ணினவனாய், ஸர்வஸ்வாமியாய், ஒருகாலும் கூயியாதபலத்தையுடைய, ராக்ஷஸஜாதிக்கெல்லாம் நிர்வாஹகனான ராவணன், (க0) முடியும்படியாக, க்ரூரமான வில்லிலே, பாணங்களை, ப்ரயோகித்து, ராக்ஷஸகுலத்தை, (கரு) நிர்மூலமாக்கி, ஜயித்தவனாய், (பசு நிரைகளையும் இடையனையும் ரக்ஷிக்கைக்காக,) கோவர்த்தநபர்வதத்தைக், குடையாகவெடுத்த, திருத்தோளையுடையனாய், (உ0) விஸ்த்ருதமாகாநின்று, அலைகளையுடைத்தான, ஜலஸம்ருத்தியையுடைய, திருவிண்ணகரிலே எக்காலமும் பொருந்திநிற்குமவனாய், (உரு) க்ரூரமான, திருக்குடந்தையிலே, கண்வளர்ந்தருளின, ஆச்ரிதவ்யாமுக்தனாய், இப்படிப்பட்டவனென்று அளவிடற்கரியனாய் இருக்கிற ஸர்வேச்வரனை, (ந0) அடிமையையே நிரூபகமாகவுடையனாய், நாய்போலேதண்ணியனானநான், நினைத்தேன். (நந) ... ... (உக)

வ்யா.—இருபத்தொன்பதாம்பாட்டு. (அன்றுயர்) முதல்பத்தில் - ஸ்வஸ்வரூப பரஸ்வரூபங்களை நிர்ணயித்து, ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தை நிர்ணயித்து, தத்விரோதியையும் நிர்ணயித்து, விரோதிநிவ்ருத்திக்கும் புருஷார்த்தஸித்திக்கும் அநுரூபமான உபாயதத்தை நிர்ணயித்து, இத்தனைக்கும் வாசகமான திருமந்த்ரத்தை வாகிந்த்ரியத்துக்கு விஷயமாக்கி, இவ்வர்த்ததத்தை நெஞ்சுக்கு விஷயமாக்கித் தெளிந்து காலக்ஷேபம் பண்ணினார்; நடுவிற்பத்தில்-காலக்ஷேபார்த்தமாக வநுஸந்தித்த அநுஸந்தாநத்தளவிலே பர்யவஸியாதே கண்ணுஞ்சுழலையிட்டு, கண்ணாலே கண்டு அநுபவிக்கும்படியானவாற்றாமைவிளைந்து, தான்நினைத்தபடி யநுபவிக்கப் பெறாமையாலே அப்ரக்ருதிங்கதராய்ப் பிறர்வாயாலே வார்த்தை சொல்ல

வேண்டும்படியான மோஹமேமயாய்ச் சென்றது; மூன்ரும்பத்தில் - இவள்தசையைக்கண்டதோழி இவளை ஆச்வஸிப்பிக்கவேணுமென்று பூர்வஸம்ச்லேஷத்தை முன்னிட, வ்ருத்தகீர்த்தநமாகையாலே தரித்துநின்று பேசினாள்; பின்னை பரச்ந ப்ரதிவசநங்களில்லாமையாலே பழையவாற்ரூமையேமேலிட்டு தூதப்ரேஷணத்திலே அந்வயித்தாள். அநந்தரம் அவன் வந்து முகங்காட்டக் காணுமாலே ப்ரணயரோஷந் தலையெடுத்தது; நம்மாழ்வானைப்போலே ப்ரணயரோஷம் கிலேநிற்கிலிதேற அவன்வந்து முகங்காட்டுவது, அது செய்யாதே நடுவே வெளிமைப்பட்டுப பழையப்ரக்ருதியிலே விழுந்தார், விழுந்தவிடத்திலும் தரித்திருக்கலாவது அவன் வந்து முகங்காட்டினேறே, அதில்லாமையாலே, நம்மாழ்வாருக்கு (க) * முனியேநான்முகனிற்பிறந்த பரமபக்தி இவர்க்குப் பிறந்து தம்முடைய அநந்யகதித்வத்தையும் ஸ்வதோஷதூயஸ்தவத்தையும் முன்னிட்டு "ப்ரணயியான நீ எனக்கு முகங்காட்டாதொழிவதே!" என்றுகூப்பிடுகிரூர். நம்மாழ்வார் பரதவத்தையும் அவதாரத்தையும் பற்றிக் கூப்பிட்டார்; இவர்க்கு பராவஸ்த்தையும் அவதாரமாகையாலே அவதாரத்தையும் அர்ச்சாவதாரத்தையும் பற்றிக் கூப்பிடுகிரூர்.

(அன்றித்யாதி) ப்ரணயிகளுக்கு முகங்கொடுத்தபடியைச் சொல்லுகிரூர். ப்ரதமத்தில் நப்பின்னைப்பிராட்டிக்கு உதவினபடியையருளிச்செய்கிரூர். (அன்று) அன்றுமின்றுபோலேகாணும் ஆபத்துள்ளது. அதாகிறது - நப்பின்னைப்பிராட்டியுடைய ஸௌந்தர்யத்தைக்கண்டு "இவளைக் காத்தூட்டவல்லாரெருஸமர்த்தன் வரைகவேணும்" என்றுபார்த்து ருஷபங்களைமுன்னிட்டு "இவற்றை நிரஸித்தவனுக்கு இவளைக் கொடுக்கக்கடவோம்" என்று ஸங்கல்பிக்கையாலே க்ருஷ்ணன்வந்து முகங்காட்டுவதுக்கு முன்பு "அந்யார்ஹமாகப் புகுகிரூமோ?" என்று நடுங்கின நடுக்கமிதேறே அவளது. (ஆயர்குலமகளுக்கு) ஆபிஜாதையானநப்பின்னைப் பிராட்டிக்கு. இவளுடைய ஆபிஜாதயத்துக்கு ஸத்ருசமான குலத்திலே பிறந்தாலலது இவளை லபிக்கவொண்ணுதென்று பார்த்திதேறே ஸ்ரீநந்தகோபர்க்குப் பிள்ளையாய்வந்துபிறந்தது. (அனையன்றன்னை) ஒருநாட்டைவன்னியமறுத்து அத்தேசத்தையநுபவிப்பித்தவோபாதிபோருமாயிற்று இவளுடைய விரோதி வர்க்கத்தினுடைய கனமும் போக்யதையினுடைய பெருமையும். அவளுடைய விரோதி வர்க்கத்தைப்போக்கி அவளுக்கு உதவினாற்போலே எனக்கு முகந்தரவேண்டாவோ வென்கிரூள்.

(க) தி - வாய் - க0 - க0.

(அலைகடலித்யாதி) பிராட்டிக்கு உதவினபடியை யருளிச்செய்கிறார். இவ்விரண்டு அபதாநத்திலும் பிராட்டியை லபிக்கைக்காகக் கடலைக்கடைந்தது. அவளுடைய தனிமையைத் தீர்க்கைக்காகக் கடலையடைத்தது ; அம்ருதப்ரதாநமும் குடியிருப்புக்கொடுக்கையும் ஆநுஷங்கிகமிறே. அவனுடைய திருவுள்ளத்தை அடியொத்தின ஆளவந்தார், (க) "యదర్థమాభిరమన్థ్యబన్ధిచ- யதர்த்தம ம்போதிரமந்த்யபந்திச" என்றருளிறே. (அம்மான்றன்னை) உன்னுடைய ப்ரணயித்வத்தை இழக்கையன்றியே, ஆநுஷங்கிகமாகக்கொண்டு துர்வாஸஶ்ஶாபத்தாலே நஷ்டஶ்ரீகரான இந்த்ராதிகள்வந்து சரணம்புகுர அவர்களுடைய அஶ்ரீயைப்போக்கி அம்ருதப்ரதாநம் பண்ணுகையாலும், ப்ரஹ்மாதிகள் ராவணனாலே குடியிருப்பிழக்க அவர்களுக்குக் குடியிருப்புக்கொடுக்கையாலும் வந்த பரத்வத்தை யிழக்கக்கிடாய்ப் புகுகிறுயென்கிறாள்.

(குன்றுதவலி) தோள்வலியாகிலிறே போதுசெய்வது, வரபலமாகையாலே போதுசெய்யாதிறே. (அரக்கர்கோனைமாள) அவ்வரபலத்தையே ஆலம்பநமாகக்கொண்டு பரஹிம்ஸையே யாதனையாயிருக்கும் ராக்ஷஸஜாதிக்கெல்லாம் நிர்வாஹகனாயிருக்கிற ராவணனை நசிப்பிக்கும்படியாக. (கொடுஞ்சிலைவாய்ச்சரந்துரந்து) கண்டபோதே எதிரிகள் மண்ணுண்ணும்படியான ஶ்ரீசார்ங்கத்தாலே திருச்சரங்களைநடத்தி. (கொடுஞ்சிலை) (உ) †" தீப்தபாவகஸஜ்காஶைः-தீப்தபாவகஸங்காஶைः" என்கிறபடியே திருச்சரங்களுக்குண்டான வேற்றுமும், (ஈ) * రామబాణాసనక్షిప్తమ్ - ராமபாணஸநக்ஷிப்தமாகையாலே. (குலங்களைந்து) ராக்ஷஸஜாதியாக வழியச்செய்து. ஶ்ரீவிபீஷணழ்வான், தன்னினைவாலும் ராவணனுடைய நினைவாலும் பெருமாள் நினைவாலும் இக்ஷ்வாகுவம்ஶ்யனிறே; தான்சொன்னஹிதம் அவன் கேளாமையாலே (ஊ) "నిశాచర-நிசாசர" என்றுன் தான்; (ரு)"శ్వాంతుధికుల-ஶ்வாந்துதிக்குலபாம்ஸநம்"என்றுன் ராவணன்; ஶ்ரீவிபீஷணழ்வான்றன்னை,(எ)"రాక్షసానాంబలాబలమ్-ராக்ஷஸாநாம்பலாபலம்" என்று பெருமாள்கேட்டார்; (ஏ) "రాక్షసానాంవధేసాహ్యమ్- ராக்ஷஸாநாம்வதேஸாஹ்யம்" என்று-ராக்ஷஸ

இருபத்தொன்பதாம்பாட்டு. (அன்றுயர்) சரங்களுக்கன்றே கௌளர்யமுள்ளது, வில்லுக்குக்கௌளர்யமேதென்ன ; அருளிச்செய்கிறார் (தீப்தபாவகஸங்காஶைரித்யாதி).

(க) ஸ்தோ - ர - ஙஎ.
(உ) ரா - யு - கசு - உஉ.
(ஈ) ரா - ஆ - கள - அ.
(ஊ) ரா - யு -
(ரு) ரா - யு - கசு - சஞ.
(எ) ரா - யு - சக - க.
(ஏ) ரா - யு - கக.

வதத்திலேஸஹகரிக்கக்கடவேனென்ரூன் தான்; ஆகையாலே ராக்ஷஸஜாதிக்குக் கூட்டல்லவென்கை. ராவணனொருவனும் அபராதம் பண்ண ராக்ஷஸஜாதியாக நசிக்கும்படியிறே அவன் பண்ணின அபராதத்தினுடைய கனம். ஒருதன் அநுகூலனனல் அவனுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுமடங்க உஜ்ஜீவிக்குமாபோலே யிறே ஒருவன் ப்ராதிகூல்யம் பண்ணினல் அவனுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுமடங்க நசிக்கும்படியும். ராவணன்பக்கல்சீற்றம் ராக்ஷஸஜாதியாகமுடிந்தது, மஹாராஜர்பக்கல் ஸ்நேஹதத்தாலே வாநரஜாதியாக வாழ்ந்தது. (வென்ரூனை) ராக்ஷஸஜாதியை நிர்மூலமாக நசிப்பித்தாற்போலே யாயிற்று - ஸ்ரீவாநரவீரரிலே ஒருத்தனுக்கு ஒருவாட்டம் வாராதபடிக் கிடாகவென்றபடியும்.

(குன்றெடுத்தகோனினை) பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களுக்கும் தன்னையொழியச்செல்லாதபடியான வாற்ரூணமையை விளைத்து அவர்களை யநுபவிப்பித்தவனை. இத்தால்-உன்னையொழியச்செல்லாதபடியான வாற்ரூணமையை விளைவித்தநீ உன்னை யநுபவிபபிக்கவேண்டாவோவென்கை.

(விரிதிரைநீர்விண்ணகரம்மருவி) அவ்வவதாரத்துக்குப்பிற்பாடராய் தூதப்ரேஷணத்திலே யங்வயிப்பது, ப்ரணயரோஷத்திலே யங்வயிபபதாரூர்க்கு உதவுகைக்காகவன்ரூ திருவிண்ணகரிலேநித்யவாஸம்பண்ணுகிறது. (விரிதிரைநீர் விண்ணகரம்)ஸௌகுமார்யத்துக்கநுகூலமான ஜலஸம்ருத்தியையுடைய தேசம். (மருவி) பரமபதத்தைவிட்டு (க)* அநந்தக்லேசபாஜநமான ஸம்ஸாரத்திலே பொருந்தி வர்த்திக்கிறது - ஆஶ்ரிதவாத்ஸல்யத்தாலே யிறே. கர்ஷகனுக்கு அகத்திற்கிடையிற்காட்டில் மடைத்தலையில் கிடையிறே பொருந்தியிருப்பது. (நாலும் நின்ரூனை) கல்பாவஸாநமாகநிற்கிறவனை.

(தண்குடந்தைக்கிடந்தமாலே)நின்ரூல் கந்தவ்யபூமியுண்டென்னுமிடந்தோற்றுமிறே, அதுசெய்யாதபடி "ஸம்ஸாரங் கிழங்கெடுத்தாலல்லது போகோம்"என்று ப்ரமஹரமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளினவனை. இப்படி இத்தேசத்திலே நிற்பது இருப்பது கிடப்பதாகைக் கடியென்னென்னில்;(மாலே) ஆஶ்ரிதவ்யாமுக்தனகையாலே யென்கை. (நெடியானே) இவன் ஆஶ்ரிதர்க்கு முகங் கொடுக்கும்படி என்னல் பேசபடபோமோ? அபரிச்சிந்நனென்னுமித்தனையென்கிரூள். அதவா, (நெடியானே) இப்படி ஸர்வஸுலபனையிருக்கிறவன்கிடீர். எனக்கு எட்டாப்பூவாயிருக்கிரூன்.

(க) ஜி - தோ - சு.

திருநெடுந்தாண்டகம்-நம-பா-மின்னுமாமழை வ்யாக்யாநம். உசநி

(அடி நாயேன்நினைந்திட்டேனே) அவனுடைய உத்கர்ஷத்துக் கவதியில்லாதாப்போலே யிறே என்னுடைய நிகர்ஷத்துக்கு அவதி யில்லாதபடி. (நாயேன்) திறந்த வாசலெல்லாம் நுழைந்து திரிகை யும், நுழைந்தவாசலெல்லாம் பரிபூதமாய்ப் புறப்படுகையும், உடை யவனே உகந்துதொடிலும் ஸ்நாநம்பண்ண வேண்டும்படியானஜந்ம தீதிலேபிறந்தவன். (அடிநாயேன்) ஸம்பந்தமே ஹேதுவாக நீமுகம் பார்த்தால் ஒழிதல் செய்யுமதொழியப்புறம்புகதியில்லாதவன். ஆஶ் ரயணவேளையோடுபோகவேளையோடு வாசியற ஆகிஞ்சந்யமும் ஸ்வ தோஷக்யாபநமுங் காணும் இவருக்குள்ளது. (க) "நாயேன் வந்த டைந்தேன்" என்றார-ஆஶ்ரயண வேளையிலே; இங்கே-(அடிநாயே ன்) என்கிறார்; இதிறே இவர் தம்மை நினைந்திருந்தபடி. † தமக்கு ண்டான நன்மையடங்கலும் போகோபகரணமாக நினைத்திருக்கும வரிறே.

நம்மாழ்வார்,(உ) "அதனிற் பெரியவென்னவா" என்று தலைக் கட்டினார், இவர் (அடிநாயேன்) என்று தலைக்கட்டினார், அதுக்கு ஹேதுவென்னென்னில்; அவர்க்கு விரக்தி நைஸர்க்கிகமாகையாலே ப்ரேமத்தைவிளக்கையாயிற்று க்ருத்யம், ஆகையாலே (உ) "அதனி ற்பெரியவென்னவா" என்னும்படிக்கீடாகப் பண்ணினான்; இவர் (ங) *வென்றியேவேண்டி வீழ்பொருட்கிரங்கி வேல்கணார்கலவியே கருதிநின்றவாகில்லாநெஞ்சினையுடையராய்ப் போருகையாலே இவ னை (அடிநாயேன் நினைந்திட்டேன்) என்னப்பண்ணுகையாயிற்று க்ருத்யம்; ஆகையாலே இவனை (அடிநாயேன்நினைந்திட்டேன்) என் னப்பண்ணினான். (நினைந்திட்டேனே) அடியிலே நிர்ஹேதுகமாகவி ஷயீகரித்ததொரு விஷயீகாரமுண்டு, அது யாவதாத்மபாவியாகவே ணுமென்று நினைத்தேன். இயற்கையிற் புணர்ச்சி யாவதாத்ம பாவி யாகவேணுமென்று நினைத்தேனென்கை. (உங)

ஆ.—மின்னுமாமழைதவழும்மேகவண்ணன்
விண்ணவர்தம்பெருமானேயருளாயென்று
அன்னமாய்முனிவரோடமரர்போற்ற
அருமறையைவெளிப்படுத்தவம்மான்றன்னை

வ்யதிரேகத்தில் தரியாமை. அப்ராப்தவிஷயங்களில் ஜுகுப்ஸைதா டக்கமான நன்மைகளுண்டாயிருக்க (அடிநாயேன்) என்பானென்னென்ன; அருளிச்செய்கிறார் (தமக்குண்டான நன்மையடங்கலுமித்யாதி.) ... (உங)

(க) தி - மொ - க - கூ - க. (ங) தி - மொ - க - க - சு.
(உ) தி - வாய் - க0 - க0 - க0. (ச)

மன்னுமாமணிமாடமங்கைவேந்தன்
மானவேல்பரகாலன்கலியன்சொன்ன
பன்னியநூல்தமிழ்மாலைவல்லார்தொல்லைப்
பழவினையைமுதலரியவல்லார்தாமே. (கூ0)

திருநெடுந்தாண்டகம் முற்றிற்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.—முனிவரோடு, அமரர், ஏத்த, அன்னமாய், அருமறையை, (கு) வெளிப்படுத்த, அமமான்றன்னை, மன்னு, மாமணி, மாடம், (க0) மங்கை வேந்தன், மானவேல், பரகாலன், கலியன், மின்னும்மா (கரு) மழைதவழும், மேகம, வண்ணர, வினைவர்தம் பெருமானே, (உ0) அருளாயென்றுசொன்ன, பன்னிய, நூல், தமிழ், மாலை, (உரு) வல்லார், தொல்லை, பழவினையை, முதலரிய, தாமேவல்லார். (கூ0)

உரை.—ருஷிகளோடேகூட, ப்ரஹ்மாதிகள், ஸ்தோத்ரம்பண்ண, ஹம்ஸரூபியாய், பெறுதற்கரிய வேதத்தை, (கு) ப்ரகாசிப்பித்த, ஸர்வேச்வரன் விஷயமாக, நிலைபெற்ற, விலையுயர்ந்தரத்நங்களால் செய்த, மாடங்களையுடைத்தான, (க0) திருமங்கைக்கு ராஜாவாய், பெருமைதங்கிய வேலையுடையராய், ப்ரதிபக்ஷத்தைவென்றவராய், கலிதோஷத்தைப்போக்கின ஆழ்வார், மின்னலையுடைத்தாய், (கரு) தர்சநீயமாய், வர்ஷியாநின்றுள்ள, மேகத்தினுடைய, வடிவையுடையனுய், நித்யஸூரி நிர்வாஹகனேவனே! (உ0) க்ருபை செய்தருளவேணுமென்று அருளிச்செய்த, (ஸ்வரூபரூபகுண விபூதிகளை) ப்ரதிபாதிப்பதாய், லக்ஷமிணுபேதமாய், தமிழ்பாஷையாய், மாலாரூபமான இப்ரபந்தத்தை, (உரு) அர்த்தத்தோடே கற்கவல்லவர்கள், அநாதிஸித்தமான, ப்ராரப்த்தகர்மத்தை, முதலோடே அரிந்துவிடுகைக்குத், தாங்களே ஸமர்த்தராவர்கள். (கூ0)

வ்யா.—மூப்பதாம்பாட்டு. (மின்னுமாமழை) நிகமத்திலேஸ்வ - லாபத்தைச் சொல்லாநின்றுகொண்டு, இப்ரபந்தத்தைஅத்யவஸித்தவர்களுடைய ஸாம்ஸாரிகமான ஸகலதுக்கங்களையும் தாங்களே முதலரியவல்லாரென்கிறார்.

(மின்னுமாமழையித்யாதி) மின்னிமுழங்கிவில்லிட்டு தர்சநீயமாய் வர்ஷியாநிற்பதொரு வர்ஷாகவலாஹகம்போலேயிருந்துள்ள வடிவையுடையவனே! ஒருநீர்ச்சாலியிலேஒருகாளமேகம்வர்ஷித்தாற்போலே (க)"அடிநாயேன் நினைந்திட்டேனே"என்று இவருடைய ஆர்த்தநாதத்தைக்கேட்டு இவருடைய தாபமெல்லாம்நீங்கும்படியாகக் குளிரநோக்கிக்கொண்டு காளமேக நிபஶ்யாமமானவடிவோடே

(க) உசு.

திருநெடுந்தாண்டகம்-நூ-பா-மின்னுமாமழை வ்யாக்யாநம். உசன

வந்து முகங்காட்டினபடியைச் சொல்லுகிறது. கீழிற்பாட்டிலே - பரோக்ஷநிர்த்தேசம்பண்ணியிருக்க இங்கே அபரோக்ஷித்துச்சொல் லுகையால் - வந்து முகங்காட்டினமைதோற்றுகிறது. ப்ரணயரோ ஷம் அகிஞ்சித்கரமான தசையிலும் ஸ்வதோஷக்யாபநம்கார்யகரமா னபடி. நம்மாழ்வார் ஜகத்காரணத்வத்திலேயுபக்ரமித்து, (க)"அவா றறச்சூழாரியையயனையரனே"என்று-ஜகதகாரணத்வததோடேதலைக் கட்டினார்; † இவ்வடிவிலேஉபக்ரமித்து"மின்னுமாமழைதவழும்" என்று வடிவோடே தலைக்கட்டினார்.

(விண்ணவர்தம்பெருமானே) இவ்வடிவைப் படியிட ஜீவித்தி ருக்குமவர்களைச் சொல்லுகிறது. * அயர்வறுமமரர்களுக்கு உண்ணை யநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிறவனே! கடலிலே வர்ஷித் தாற்போலே அவர்களுக்கு உன்னைக் கொடுக்குமது ஓரேற்றமோ? அவர்கள் உன்னை ஸதாதர்சநம் பண்ணுமாபோலே நானும் உன்னை சரீரஸம்பந்தமற்று ஸதாதர்சநம்பண்ணும்படி க்ருபைபண்ணியருள வேணும். (அருளாய்) பரமபக்தி பர்யந்தமானவிடாய் பிறந்தவிட த்திலும் இரக்கமே ஸாதநமென்றிருக்கிறார். (உ) "ஆழியானருளே" என்று விஷயாந்தர நிவ்ருத்திக்கும் இரக்கமே ஸாதநமென்றார், பகவதநுபவத்துக்கும் இரக்கமே ஸாதநமென்கிறார்.

(அன்னமாயித்பாதி) தமக்கு அவன்வந்து தன்னைக்கொடுத்த படிக்கு த்ருஷ்டாந்தஞ்சொல்லுகிறார்: ப்ரஹ்மாவுக்கு ப்ரமாணத் தை வெளியிட்டாற்போலே யாயிறறு தமக்கு ப்ரமேயபூதனை தன்னை வெளியிட்டபடியும். (முனிவரோடமரரேத்த) ருஷிகளோ டேகூட ப்ரஹ்மாதிகள் "வேதசக்ஷுஸ்ஸையிழந்தோம்" என்று தன்னையாஸ்ரயித்து ஏத்த. ருஷிகளுக்கும் ஆத்மோஜ்ஜீவநார்த்தமாக ப்ரமாணமேபேக்ஷையுண்டு, ப்ரஹ்மாதிகளுக்கு ஸ்ருஷ்ட்யாதிவ்யாபார த்துக்கு ப்ரமாணமேபேக்ஷையுண்டு. (அன்னமாய்) அபௌருஷேயத் வங்குலையாதபடி ஹம்ஸரூபியாய். (அருமறை) பெறுதற்கரியவே தம். பெறுதற்கரியது ப்ரமேயமன்று, பரமாணமாயிற்று. (வெளி ப்படுத்த) † ப்ரமாணத்துக்கு உத்பத்திவிநாசமாவது-ப்ரகாசாப்ரகா

மூப்பதாம்பாட்டு. (மின்னுமாமழை) "மணியுருவில்பூதமைந்தாய்" என் றத்தைப்பற்ற (இவர் வடிவிலேயித்யாதி).

(ரு) "வாங்மந்ஸ்ப்ருஷ்டாஸ்வயம்புவா"இத்யாதி யாலே வேதத்துக்கு உத்பத்திசொல்லாநிற்க (வெளிப்படுத்த) என்பானென் னென்ன; (ப்ரமாணத்துக்கு உத்பத்தியித்யாதி).

(க) தி - வாய் - கo - கo - கக. (ரு)
(உ) தி - மொ - க - க - கூ -

சங்கனென்னை. (அம்மான்றன்னை) ஸர்வேஶ்வரனை இவர்களுக்கு வேதப்ரதாநம்பண்ணுகைக்கடி உடையவனுகையாலே யென்னை.

(மன்னுமாமணிமாட மங்கைவேந்தன்) இவர் தரித்தவாறே ஊரும் ஸ்த்திரமானபடி. கல்பாவஸாநத்தளவும அழிவின்றிக்கே ஶ்லாக்யங்களான ரத்நங்களாலே செய்யப்பட்டமாடங்களையுடைத்தான திருமங்கை. (மங்கைவேந்தன்) பகூஷியின்காவிலேவிழுந்தவர் திருமங்கைக்கு நிர்வாஹகராஞர். (மானவேல்பரகாலன்) வேலெடுக்கவும் கூடுமராஞர்; கிஞ்சித்கரிக்கவும் பெற்ருரென்னை. † அத்தலையில் பரிவாலே யெடுத்தவேலிறே. (மானவேல்) காபுருஷனெடுக்கிலும் திருமங்கைமன்னனுக்கவல்லவேல். † மானவேற்பரகால னென்னுதல். (பரகாலன்) கையில் வாளாலும் ப்ரதிபாதநத்தாலும் ப்ரதிபக்ஷத்தைவென்று வைதிகமர்யாதையை ஸ்த்தாபித்தவர். (கலியன்) உபயத்துக்கும் அடியான மிடுக்கைச்சொல்லுகிறது. கலி - மிடுக்கு. அங்ஙனன்றியே, கலிகாலத்தைக் கடிந்தவரென்னுதல்.

(பன்னியநூல்தமிழ்மாலைவல்லார்) பன்னுதல் - பரம்புதல். ஸ்வரூபரூபகுணவிபூதிக ளித்தனையும் விளாக்கொலை கொண்டிருக்கை. நூல்-ஸர்வலக்ஷணலக்ஷணபதமாயிருக்கை. பின்பு லக்ஷணங்கட்டுவார்க்கும் இதுவே கொண்டு செய்யவேண்டும்படியிருக்கை. தமிழ்-ஸர்வாதிகாரமாயிருக்கை. (மாலை) ஈஶ்வரனுக்கு சிரஸாதார்யமாயிருக்கை. (தொல்லையித்யாதி) கார்யகாரணரூபத்தாலே அநாதியாய் வருகிற அவித்யாகர்மவாஸநாருசிப்ரக்ருதி ஸம்பந்தங்களைத்தாங்களே ஸவாஸநமாகப போக்கவல்லவர். (வினை) அதாகிறது - புண்யபாபரூபமான கர்மத்வயம். இதுதான் பூர்வோத்தராகப்ராரப்தரூபமாயிருக்கும். இதுதான் அல்லாத ஜ்ஞாநாநுதயம், அந்யதாஞாநம், விபரீதஜ்ஞாநம், ஸ்த்தூலஸூக்ஷ்மரூபமான அசித்ஸம்பந்தம், வாஸநாருசிகளுமாகிற விரோதிவர்க்கத்துக்குமுபலக்ஷணம்.

(தொல்லைப்பழவினை) என்கிறது - இவைதான் † பழையதாயிருக்கையும் அடிகாணவொண்ணுதிருக்கையுமாகிற அதிசயத்தைப் பறறச்சொல்லுதல்; அறவும் பழையதானவினையென்னுதல். (தாமே)

வேலெடுக்கை கிஞ்சித்காரமாகக் கூடுமோவென்ன; அருளிச்செய்கிறார் (அத்தலையில் பரிவாலேயித்யாதி). (மானம்) என்றது பரகாலனுக்கு விசேஷணமான பகூஷத்தில் - தாஸ்யாபிமாநத்தையுடையரான பரகாலனென்றபடி.

(தொல்லை) என்றும், (பழமை) என்றும் சொன்னது புநருக்தமன்றோவென்ன; கார்யகாரண ரூபத்தாலே யருளிச்செய்கிறார் (பழையதாயித்யாதி).

திருநெடுந்தாண்டகம்-கூ0-பா-மின்னுமாமழை வ்யாக்யாநம். உசகூ

இப்ரதிபந்தகங்களையெல்லாம் தாங்களே ஸவாஸநமாகப் போக்கவல்லார். ஈச்வரன் முழங்கைத்தண்ணீர்வேண்டாவென்கை.

† (அருளாயென்று-முனிவரோடமரேத்த) என்று, அவர்களுக்கு விசேஷணமானபோது - எம்பெருமானைக் கண்டபோதே, (க) "என்னவாவறச்சூழ்ந்தாயே" என்னசக்தரல்லாமையாலும், கீழிற பாட்டுப்போலே இப்பாட்டில் இயலின்பலஹாநி தோற்றியிராமையாலும், எம்பெருமான் திருமேனி வர்ஷாகவலாஹகம்போலேயிருந்ததென்கையாலும, * அயாவறுமமரர்களுக்குத் தன்னை புஜிக்கக்கொடுத்துக்கொண்டிருக்கும்படியைச் சொல்லுகையாலும், தாமே வேலெடுக்க சகதாராகையாலும், ப்ரதிபக்ஷத்தை நிரஸித்தபடியை யருளிச்செய்கையாலும, இப்படியுள்ள பேச்சுக்களெலலாவற்றாலும் - தம்முடைய பலஹாநிபோய்த தம்முடைய விபக்ஷிதபெற்று தருப்தராநாரென்னு மிடம இப்பாட்டிலே வ்யக்தம்.

[முனிவரோடமரேத்த - அன்னமாய் அருமறையை வெளிப்படுத்த வம்மான்றன்னை மன்னுமாமணி மாடமங்கை வேந்தன் மான வேல்பரகாலன் கலியன் - மின்னுமாமழை தவழும் மேகவண்ணவிண்ணவர்தமபெருமானே யருளாயென்று-சொன்ன - பன்னிய நூற்றமிழ்மாலைவல்லார் தொல்லைப்பழவினையை முதலரியவல்லார் தாமே] என்றந்வயம். (கூ0)

பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த

திருநெடுந்தாண்டக வ்யாக்யாநம்

முற்றிற்று.

பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளேசரணம்.

(மின்னுமாமழைதவழும்) இத்யாதியெல்லாம ஸ்வரஸமாக ப்ரஹ்மாதிகளுக்கு விசேஷணமாகத் தோன்றியிருக்க, சப்தத்தைதெருக்கி இவருக்கு விசேஷணமாக யோஜிக்கிறதுக்குக் கருத்தென்னென்ன; அருளிச்செய்கிறார், (அருளாயென்று முனிவரோடமரேத்தவென்றித்யாதி). (கூ0)

அரும்பதம் முற்றிற்று.

(க) தி - வாய் - க0 - க0 - க0.